திராவிடநாடு

மலர் 15 :: இதழ் 1

8—7—56

15-ம் ஆண்டு துவக்கம்

கேட்டீரா! சேதி!

என். ஜி. ஓ.க்கள் வேலை நிறுத்தப் பிரகடனம் செய்திருந்தார்கள் அல்லவா? அவர்கள தலைவரை அழைத்து, தான் ஆவன செய்வதாக வாக்குறுதி அளித்தாராம், முதலமைச்சர் காமராஜ். அதன்மீது நேரடி நடவடிக்கை எடுப்பதை ரத்து செய்திருக்கிறார்கள், என். ஜி. ஓ. சங்கத்தார். சங்கடப்படும் என். ஜி. ஓக்களின் குறைகளை, காமராஜர் அரசு கவனிக்குமா அல்லது இதையும் 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று தட்டிக் கழிக்குமா என்பதை எதிர்காலம் தான் சொல்லவேண்டும்.

*

இந்த 'ஒப்பந்தம்' இங்கே நடைபெற்றிருக்கிற இதே வாரத்தில் 3000 சர்க்கார் குமாஸ்தாக்கள் அதிகச் சம்பளம் கோரி வெற்றிபெற்றிருக்கிறார்கள், மலேயாவில்! தமக்கு அளிக்கப்படும் சம்பளம் போதுமானதாக இல்லையென்பதால் வேலை நிறுத்தம் செய்யப்போவதாகத் தீர்மானம் செய்த உடன், தலைவர் குலராஜா என்பவரைக் கூப்பிட்டனுப்பி 25 வெள்ளி அதிகச் சம்பளம் தருவதாகச் சொல்லி, சமரசம் செய்துகொண்டிருக்கிறது மலேயா சர்க்கார்.

*

ஒரு பெண் புல் கட்டுடன் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தாள். எதிரே திடீரென்று ஒரு புலி வந்தது. ஒரு விநாடி திகைத்து யோசித்தாள். புலி அருகில் வந்தது. புல் கட்டைத் தனக்கு முன்னால் வைத்து மறைத்துகொண்டாள். புல் கட்டுக்கு அப்பால் புலி திகைத்து நின்றது. அந்தக் கட்டைக் கொண்டே புலியைக் கொஞ்சம் கொஞ்சமாக பின்னால் தள்ளினாள். ஒரு பாறையின் ஓரத்துக்கு வந்ததும் திடீரென வேகமாகப் புல் கட்டைத் தள்ளினாள். புல் கட்டும் புலியும் ஆழமான பள்ளத்தில் உருண்டன. சம்பவம் ஜூலை 2ந் தேதி பாட்னாவுக்கருகில் நிகழ்ந்துள்ளது.

*

மத நம்பிக்கை எவ்வளவு பாடுபடுத்துகிறது பாருங்கள். இந்தோனேஷியாவில் ஜாகர்த்தாவுக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் "குருமார்கள்" இருவர் தோன்றி, புதிய மதம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். இம்மதத்தின் முக்கிய கோட்பாடு, மனைவிமார்களை ஆடவர்கள் பரிமாறிக்கொள்ளவேண்டும் என்பதாம். "பூர்வீக மதம்" எனும் பெயர்கொண்ட இம்மதத்தில் சேர 360-ரூபாய் கட்டவேண்டுமாம் ஒவ்வொருவரும். இம்மதத்தில் சேராவிட்டால், மஞ்சள் உடையணிந்த பிசாசுப்படை கிராமத்தைத் தாக்குமென்று பயமுறுத்தவே அஞ்சிச் சிலர் சேர்ந்தனராம். தகவல் சர்க்காருக்கு எட்டவே, போலீசார்வந்து அவர்களைப் பிடித்துக்கொண்டு போய் சிறையில் தள்ளியிருக்கிறார்கள். எந்த மஞ்சள் பிசாசுப் படையும்வந்து, அவர்களை மீட்கவில்லை! இப்போது சிறைவாசம் அனுபவிக்கின்றனர்.

*

பெப்சு சர்க்காரின் 1956–57ம் ஆண்டு பட்ஜட் அம்பலமாயிற்று அல்லவா? இதைப்பற்றி விசாரிக்க 5 பேரடங்கிய ஒரு கமிட்டி, போடப்பட்டிருந்தது. அக் கமிட்டி, மேற்படி தவறுக்கு நிதி மந்திரியே காரணமென்றும், "பட்ஜட்டின் புனிதத் தன்மையையும். பார்லிமெண்டின் பண்பாடு சம்பிரதாயங்களையும் அனுசரித்து நிதி மந்திரி ராஜினாமா செய்திருக்க வேண்டுமென்றும்", தன்னுடைய கருத்தைத் தெரிவித்துள்ளது, கடந்த 2ந் தேதி.

*

கிழவர் ஒருவர் திருமணம் செய்துகொள்ள ஆசைப்பட்டார். குமரியும் 'சரி' என்று மனமொப்பினாள். தாத்தா கட்டிய தாலி மட்டும் போதுமா, சுகமடைய? தவிப்பு, பிறகுதான் தெரிய ஆரம்பித்தது. ஒரு மாதம், இரண்டுமாதம், என்று ஐந்துமாதங்களை வேதனையுடன் கழித்தாள். அப்படியும் முடியாமற்போகவே, ஜூன் மாதம், அக்குமரி கோர்ட்டில் விவாக ரத்து மனுப்போட்டாள். "என் தாத்தாவாக இருக்கக் கூடிய இந்தக் கிழவருடன் வாழ்வதென்பது முடியாத காரியம்!" என்று விசாரணையில் தெரிவித்தாளாம். சம்பவம், கொழும்புவில் நடந்ததாகும். திருமண ரத்து முறை மட்டும் இல்லாமலிருந்தால் அக்குமரியின் வாழ்வு எப்படியாயிருக்குமோ?

*

வருகிற நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் மொகலாயச் சிம்மாசனத்தில் அக்பர் சக்கரவர்த்தி ஏறிய 400 ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதென இலட்சுமணபுரி பல்கலைக் கழகம் முடிவு செய்திருக்கிறது. இந்த யோசனைக்கு மூலகர்த்தா முன்னாள் 'மர' மந்திரி கே. எம். முன்ஷியாம்.

*

சமீபத்தில் இமயமலையில் லோட்சே எனும் சிகரத்தில் ஏறிய சுவிட்சர்லாந்துக் குழு கடந்த மார்ச்சில் திபெத்திலுள்ள காட்மாண்டுக்கு வந்தது. மேற்படி குழுவிலிருந்த லூஷிங்கர் என்பவருக்கு கடும் வயிற்று வலி ஏற்பட்டு ஆபரேஷன செய்யும் நிலைமை ஏற்பட்டது. ஆபரேஷனை தமது மடத்தில் நடத்த மதகுருவான லாமா அனுமதியளிக்கவில்லை. ஆபரேஷனில் கத்தி, கத்தரிக்கோல் உபயோகப்படுத்தப்படும், ரத்தம் சிந்தும் என்பதே காரணமாம். அதனால், மடத்தில் வெறும் சிகிச்சை மூலமாகவே அவருடைய வயிற்று வலியைக் குணப்படுத்தவேண்டிநேர்ந்தது.

★

ஆண்டுச் சந்தா ரூ. 7

மலர் 15 :: இதழ் 1
8—7—56

பதினைந்தாம் ஆண்டு

பதினைந்தாம் ஆண்டு துவக்கம். 'திராவிட நாடு' நேற்றுத்தான் துவக்கப்பட்டதுபோலத் தோன்றுகிறது; ஆனால், பதினான்கு ஆண்டுகளாகி விட்டன. இந்தக் கட்டம் அடைவோம் என்று நாமே நினைத்ததில்லை. ஏனெனில், பத்திரிகையைத் தொழில் என்ற நோக்குடன் கவனிக்கும்போது அதிலே உள்ள சிக்கலும் சங்கடமும் எவரையும் மிரட்டக்கூடியது.

பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு, ஆதரவாளர்களை அதிகம் பெற்றில்லை; திராவிடநாடு ஏடுமட்டுமல்ல, திராவிடர் இயக்கமே செல்வாக்கு அற்ற கட்சியென்று கருதப்பட்ட காலம், அது. எழுத்தாளர்கள் இப்போது எங்கு நோக்கினும் தமிழும் அறிவும் கலந்து அகமகிழும்வண்ணம்அளிக்க முன்வருகிறார்கள். அன்றோ, இத்துறையிலும், நமக்குப் பஞ்சமே. வசதிகளற்றநிலை மட்டுமல்ல, வசைபாடுவோர், எரிச்சலை வீசித் திரிவோர், இது வாழுமா என்று ஆண்டுகளை விரலிலே வைத்தோர், அநேகம், அநேகம். இத்தனையையும் சமாளித்துக்கொண்டு, ஏடு, இன்று பதினைந்து வயதை அடைந்துள்ளது; மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த மகிழ்ச்சி நமக்குப் பிறக்கவும், ஏடு இந்த அளவுக்கு வளம் பெறவும், திராவிடநாட்டு மக்களின் பேராதரவும் அன்புமே காரணம் என்று நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. அவர்களின் அரவணைப்பு மட்டும் நமக்குக் கிடைத்திராவிடில், கருகிப்போன எத்தனையோ இதழ்களைப்போல 'திராவிட நாடும்' ஆகியிருக்கக் கூடும். ஆகவே, ஆரம்பித்த நாள்முதல் இன்றுவரை, தங்களுடைய குடும்பத்துச் செலவுகளில் ஒன்றுபோலவும், நித்ய கடமைகளில் ஒன்றெனவும் கருதி, திராவிட நாட்டினர் நமக்கு அளித்துவரும் ஆதரவினை நாம் மறந்தோமில்லை. அவர்களது ஒத்துழைப்புக்கும் ஆதரவுக்கும் நமது நன்றியறிதலை, இந் நன்னாளில் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பெருமூச்சுடன் நாம் கழித்த ஆண்டுகள் பல, எனினும், இன்று அந்தக் கட்டத்தை தாண்டும் பக்குவ நிலையிலிருப்பதாகவே எண்ணுகிறோம். ஏனெனில், ஒருபோது பதர் எனக் கருதப்பட்ட அறிவிபக்கம் இன்று அழகான மலர் என எதிரிகளும் வியக்குமளவுக்கு வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சியில், திராவிட நாடு ஏட்டுக்கும் பங்குண்டு. பணியை மட்டுமல்ல நாம் குறிப்பிடுவது, ஏட்டின் வளர்ச்சியையும்தான்.

இயக்கக் கொள்கைகளோடு பின்னிப் பிணைந்து கிடக்கும் திராவிட நாட்டுக்கு, இயக்கத்துக்குக் கிடைப்பதுபோலவே, பற்பல திசைகளிலிருந்தும் ஆதரவு திரண்டு வருகிறது. மாணவர்கள், தொழிலாளர்கள், துரைத்தனத் தொழிலாளர்கள், இப்படி சமூகத்தில் பலதரப்பட்டவர்களுடைய ஆதரவும் பெருகிக்கொண்டிருப்பதை நாம் மறுப்பதற்கில்லை! அதனால், ஏடு, முன்னைவிட அதிகமாக அச்சிட்டு அனுப்பவேண்டிய நிலைமைக்கு வளர்ந்துள்ளது எனகிற ஆனந்தத்தையும், வளர்த்தவர்களாகிய மக்களுக்கு அறிவிக்க, கடமைப்பட்டிருக்கிறோம்.

வளர்ச்சியின் பாதை விரிவாக விரிவாக 'திராவிடநாடு' இன்னும் எழிலும் சுவையும் அதிகம் பெறும்! விரைவில், வாசகத் தோழர்களுக்கு சிறுகதை விருந்தும், தொடரோவியங்களும் கிடைக்குமென்கிற செய்தியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். திராவிட நாடு ஏட்டில், வெளிவந்த தொடர்கதைகள் இடையிலே துவண்டதுபோல இனிமேல் இராதென்ற உறுதியினை, நண்பர்களுக்கு அளிக்கிறோம். ஓவியங்களும், எழுச்சிச்சித்திரங்களும், இன்னும் பல புதுமைகளும், நீங்கள் பெறக்கூடும். தேடி அளிக்க வேண்டும் என்கிற ஆசையும், ஆர்வமும் அதிகமாகி வருகிறது. அணா பைசாக்களைக் கணக்கிட்டு அச்சமும் பெருமூச்சுமாகக் காட்சியளிக்கும் அடிக்கடி பத்திரிக்கையில் 'அது வரவேண்டும் இதுவரவேண்டும், இந்த வண்ணம் சுகமில்லை, அந்தக் கலர் போடலாம்' என்று நம்மைத் துரத்துகிறார். அவ்

திராவிடநாடு

வளவு தூரத்துக்கு ஆங்காங்குள்ள நமது ஏஜண்டுத் தோழர்களின் ஆதரவும், கடமை மறவாப் பண்பும், அவருக்கு உற்சாகத்தை யூட்டி வருகிறது; வளர்க அதுவென, வாழ்த்துகிறோம்!

கடந்த ஆண்டுத் துவக்கத்தில்,ஏட்டுக்கு சந்தாதார்கள் நிறைய வேண்டுமெனக் குறிப்பிட்டோம். வேண்டுகோள், பலனளிக்காமற் போகவில்லை.

அதுபோல இந்த ஆண்டும் பல சந்தாதாரர்கள், ரூபாய் ஏழினைச் செலுத்தி, ஏட்டுக்கு ஆதரவளிக்க முன் வருவரேல். பல ஆசைகளை தங்கு தடையின்றி நிறைவேற்றவும், வாசகர்களுக்கு அவைகளைத் தந்து மகிழவும் வசதியாக அமையும். தோழர்கள் கொஞ்சம், கவனம் செலுத்துவார்களாக!

திராவிடநாடு, உங்களுடைய ஏடு. ஆகவே, கை ஓயும் வரை, அநீதி ஒழியவும், புதுமை மலரவும், தன்னாட்சி ஏற்படவும், தன்னுடைய பெருந் தொண்டினைச் செய்யும், செய்யும் என்கிற உறுதி மொழியினை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். உங்களுடைய அன்பும் ஆதரவுமே, எமக்குப் பொன்னும் பொருளும். அந்த அன்பும் ஆதரவும் பெறும் பேற்றைத் திராவிடநாடு, இந்தப் பதினான்கு ஆண்டுகளில் பெற்றுவிட்டது; பூத்துவரும் புதுயுகத்துக்கு எம்மாலான தொண்டினைச் செய்யும் வாய்ப்புப் பெற்றோமே என்கிற பூரிப்போடு அனைவருக்கும் எம்முடைய நன்றியறிதலைக் குவித்தவண்ணம், பதினைந்தாம் ஆண்டில் எடுத்தடி வைக்கிறோம். இன்பம் பெறுவீர்! திராவிட நாடு எழில பெற வாழ்த்துவீர்!!

★

மேற்பாலம் இடிந்தது

அடடா! எவ்வளவு அற்புதமான திட்டங்கள், அனுதினமும் புறப்படுகின்றன இந்தக் காங்கிரசாட்சியில்!!

அதிலும் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று அகப்பட்டதும் போதும், எதையெடுத்தாலும் ஐந்தாண்டுத் திட்டம்தான், என்னகேட்டாலும் ஐந்தாண்டுத் திட்டம் என்ற சாக்குத்தான்.

எஃகு ஆலையைப் பெருக்குகிறார்களாம் — இரஷ்யாவிலிருந்தும் பிரிட்டனிலிருந்தும் எஃகுப் பொருள்களை இறக்குமதி செய்கிறார்களாம்—இரும்பை வெட்டியெடுக்கப் பலமான முயற்சிகள் செய்யப்படுகிறதாம் — குக் கிராமத்திலிருக்கும் சுவர்கள் முதல், கோலோச்சுபவர் வாழும் பட்டினம் வரையில் ஒரே சீர்திருத்தமயம் தான்! வானளாவும் கட்டிடங்கள் எழுப்பப்படுகின்றன— அவைகளுக்காக சிமெண்டும் இரும்பும் மலை மலையாகக் கொட்டப்படுகின்றன — வரும் வெளிநாட்டு விருந்தினரை உபசரிப்பது முதல், வளங்களைத் தேக்கி ஆலைகள் அமைப்பது வரை, எழும்பும் மாளிகைகள் பல — அணைக்கட்டுகள்! மின்சாரத் திட்டங்கள்!!

இத்தனை புதுமைகளும் ஏற்படுவதாகச் சொல்லப்படும் இச்சமயத்தில் இருபது பேருக்குமேல் படுகாய மடைந்தனராம். ஒரு இரயில்வே மேல்பாலம் இடிந்து விழவே, இத்தனை பேருக்குப் படுகாயமாம், கல்கத்தாவுக்கு அருகில்.

ஏன் மேல்பாலம் இடிந்து விழுந்ததாம் தெரியுமா? மக்கள் கூட்டம் கூட்டமாக மேல்பாலத்தில் நடந்து போக இருந்ததால் தான் இடிந்து விழுந்ததாம்!!

விபத்து நடைபெற்றது பாலிகஞ்ச் எனும் புகை வண்டி நிலையத்தில்.

இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கம் போவோருக்கும், அங்கிருந்து வருவோருக்கும் வசதியாக இருக்கத்தான் ஒவ்வொரு பெரிய இரயில் நிலையத்திலும் மேல்பாலங்கள் உள்ளன.

சர்க்கார் காரணம் கூறுகிறது, அப்படி மக்கள் நடந்து வந்ததால்தான், பளு தாங்காமல் இடிந்து விழுந்ததாம்.

நடந்து வரத்தானே மேல் பாலம்! நெருக்கடி அதிகம் ஏற்பட்டால் தவறி விழுவரே ஒழிய பாலமே நொறுங்கியா விழும— சிறு பிள்ளைகள் கட்டிடும் மண் வீட்டைப் போல?

உண்மைக்காரணத்தைச் சர்க்கார் சொல்லமாட்டார்கள். அந்த மேல்பாலம், எப்போதோ, இங்கிலீஷ்காரன் கட்டிக்கொடுத்தது! அது எப்படி உளது, எங்கெங்கே சீர்திருத்தப்பட வேண்டும் என்கிற சிரத்தை இல்லை, இரயில்வே இலாகாவுக்கு.

அதற்குள்ள கவனம் எல்லாம், எப்படி இரண்டாவது வகுப்பை 'இன்டர்' வகுப்பாக்கலாம், 'இன்டர்' வகுப்பாகயிருந்ததை இரண்டாவது வகுப்பாக்கலாம் என்பதுதானே ஒழிய — அதைத்தான் 'பெரிய புரட்சி' என்று அமைச்சர்களும் பேசுகிறார்களே தவிர, சோடை சொட்டைகளைக் கவனிக்கும் எண்ணம் எழுவதில்லை. இருந்தால், அடிக்கடி இரயில்கள் தண்டவாளத்தை விட்டு இறங்குவதும், வண்டிகள் ஓடும் சூடு தாங்காமல் தீப்பிடித்துக் கொள்வதும் ஏற்படுமா?

இந்த அழகில், பெரம்பூரில் புதிய 'கோச்' பாக்டரியாம்! அதன் அற்புதத்தைப் பற்றி, ஏடுகளில் விளம்பரங்கள் வருகின்றன!! அங்கிருந்து என்ன புதிதாக வந்தது எனறு 'குப்பனையும் கோவிந்தனையும்' கேட்டுப் பாருங்கள். விழிப்பார்கள்!

செய்வதையும், திருந்தச் செய்வதில்லை — இருப்பதையும் சரியாக வைத்துக் கொளவதில்லை.

கணக்கு மட்டும் கோடி கோடியென்று பேசப்படுகிறது! கல்கத்தாவில் பாலம் இடிந்து படுகாயத்துடன் கிடககிறார்கள் இருபது பேர்!!

இதற்குத்தான் இராணுவம்!

பஞ்சசீலம் போதிக்கிறார், பண்டித நேரு—உலகுக்கு.

உருக்கமான பேச்சும், உலக சமாதானமே என் மூச்சு என்று கூறும் அவரது சொல் வீச்சும, ஒரு நிருபரைத் தூண்டியிருக்கிறது.

ஜூலை 2ந் தேதி, நிருபர், பாதுகாப்பு மந்திரி கட்ஜுவைச் சந்தித்து, "ஐயன்மீர்! பஞ்சசீலம் போதிக்கிறோமே, நாம் உலகுக்கு. அதில் நமக்குள்ள சிரத்தைக்கு அடையாளமாக, இராணுவத்தைக் குறைத்துக் காட்டலாகாதா?" என்று கேட்டிருக்கிறார்.

தமிழகத்தில் சுற்றுப் பயணம் நடத்திவரும், பூமிதான அடிகள் வினோபாகூடச் சொல்லிவருகிறார், அடிக்கடி — அவசியம், நேரு சர்க்கார் தமது இராணுவச் செலவைக் குறைத்துக் காட்டவேண்டும் என்று. அகிம்சையின்மீதுள்ள நம்பிக்கையும், உலக சமாதானத்தின்மீது இருக்கிற நல்லெண்ணமும் அப்போதுதான் விளங்கும் என்கிறார் வினோபா.

கட்ஜு புதியதொரு விளக்கம் அளிக்கிறார், இந்தியாவின் அளவைப் பார்க்கும்போது, இப்போதிருக்கும் படைகள் போதுமானதாயில்லையாம்.

இந்தியாவின் வருமானத்தில், பாதிக்குமேல் விழுங்கி வருகிறது இராணுவம்—இவர்கள் வசம் ஆட்சி வந்த பிறகு, இந்த ஏழாண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 2000 கோடி ரூபாய்கள் விரயமாகியிருக்கின்றது இத்துறையில். இருந்தும், கூறுகிறார் அவர். இப்போதிருக்கும் படை போதுமானதாயில்லையாம்!

அதோடு நிறுத்திக்கொள்ளவில்லை, 'அகிம்சா' போதித்த கட்சியின் அருமந்த அமைச்சர். மேலும் கூறுகிறார், குற்றங் கூறுவோரின் வாயடைக்க, "இன்று நாம் பார்த்துச் சந்தோஷப்படுகிற நிலையில் நாடு இல்லை!"

நாடு, சந்தோஷப்படுகிற நிலையில் இல்லையாம்—அதனால் இராணுவம் தேவைப்படுகிறதாம்.

நாட்டில், அமைச்சர் கூறும் சந்தோஷம் ஏனில்லை?—என்பதைவிட. இவர்கள் ஆட்சிப் பொறுப்பிலேறிய பிறகு எப்போதுதானிருந்தது, என்று கேட்கிறோம்.

கம்யூனிஸ்டுகளைச் சுட்டுப் பொசுக்க வேண்டும். அவர்கள் கலவரம் சகிக்க முடியவில்லை. இராணுவமே, கிளம்புக!

இது, முதல் முழக்கம். இராணுவத்துக்கு இது பெரிய வேலையாகயிருந்தது. கேட்டதற்கு, 'ஏ! அப்பா, கம்யூனிஸ்டுகளை இப்படி அதட்டி உருட்டி அடக்காவிடில், நாடே ரஷ்யாவாகிவிடும். ரஷ்யாக்காரன் நம சுதந்திரத்தை அபகரித்துக்கொள்வான்' என்றார்கள்.

இப்படிச் சொல்லி, இந்த நாட்டு மண்ணில் வாழவேண்டிய பலரை வேட்டும் குண்டும் பிணங்களாக்கியதே தவிர, கம்யூனிஸ்டுகள் இதோ, இருக்கிறார்கள். எம். எல். ஏ-க்களாகவும் எம். பி. யாகவும்! அவர்களோடு கைகுலுக்குவது மட்டுமின்றி, அவர்களை ஆட்டிவைக்கும் தேசமென்று பேசப்பட்ட இரஷ்யாவுக்கும் இவர்களே ஓடுகிறார்கள்!

"காஷ்மீரத்தை இழப்பதா? அதைக் காப்பாற்ற வேண்டாமா! ஷேக் அப்துல்லா யார்? காங்கிரசின் சகாவன்றோ? இராணுவமே, கிளம்பு!"

என்றார்கள், பிறகு. டாங்கிகள் வரிசை வரிசையாகச் செல்லுவதையும், விமானங்கள் பறப்பதையும், நமது வீரர்கள் சென்று முகாம் அமைத்திருப்பதையும், படங்களாகவே எடுத்துக் காட்டினார்கள்! இதோ வெற்றி, அதோ வெற்றி விழா என்றெல்லாம் பிரசாரம் நடந்தது. விளைவு, 'காஷ்மீரம் கைவிட்டுப் போய்விடுமோ, என்னும் கலக்கம்தான் மிச்சம்' கூடிக் குலவிய ஷேக் அப்துல்லாவைக் கூண்டுக்குள் போட்டு அடைத்ததோடு, சரி!

பிறகு, கேட்டவர்களுக்குப் பதில் சொன்னார்கள்.

"எப்படி, படையைக் குறைப்பது? அமெரிக்காக்காரன், பாகிஸ்தானுக்கு தளவாட உதவி தருவதாக ஏற்பாடு ஆகியிருக்கிற இச்சமயத்தில், நாம் இளிச்சவாயராகி விடலாமோ? ஏதாவது ஒன்று ஏற்பட்டு விட்டால் நாட்டைக்காக்கப படைகள் வேண்டாமோ? பெற்ற சுதந்திரத்தை இழக்க நாம் என்ன பித்தர்களோ!

பாகிஸ்தான் படைகளைத் திரட்டிக் கொண்டு, இன்றோ நாளையோ பாய் இருப்பதுபோலவும், அதைத் தடுக்க அவசியம் இராணுவம் பீரங்கிகள் சகிதம் இருக்கவேண்டியது போலவும் பேசினார்கள்.

இப்போது, பேசப்படுகிறது, **நாட்டின் அளவைப் பார்க்கிறபோது, இருக்கிற இராணுவம்கூடப் போதாதாம்!**

ஏனெனில், நாடு, நாம் பார்த்துச் சந்தோஷப்படுகிற நிலைமையில் இல்லையாம்!

நம்முடைய இராணுவங்கள் இரண்டு எல்லையோரங்களைப் பாதுகாப்பதோடு மட்டுமின்றி, உள் நாட்டுப் பாதுகாப்புக்கும் தேவைப் படுகிறதாம்!

தோலைக். கடித்து, வாலைக் கடித்து, மாட்டைக் கடித்து, பிறகு மனிதனைக் கடித்தது என்பார்கள்! அதுபோல, இந்த ஏழாண்டுக் காலத்தில், ஏன் இராணுவச் செலவைக் குறைக்கக்கூடாது என்று கேள்விகள் எழும்பியபோதெல்

லாம் ஏதேதோ கூறிவந்தவர்கள், இன்று பகிரங்கமாகவே தெரிவிக்கிறார்கள்.

இப்போது, உள்நாட்டுப் பாதுகாப்புக்கு இராணுவம் தேவையாம்.

இந்த இராணுவமும் போதுமானதாயில்லையாம்.

ஏனெனில், நாடு பெரிதாம்.

இதுபோலத் துணிந்து ஹிட்லர் கூடப் பேசி இருக்கமாட்டான், அவன் கூட ஜெர்மனியின் புல் பூண்டுகளை அழிப்பதற்காக இராணுவத்தைப் பயன்படுத்தினான் என்று கூற இயலாது, ஆனால் 'நம்ம' டில்லி தெரிவிக்கிறது,

உள் நாட்டுப் பாதுகாப்புக்காக இராணுவம் தேவைப்படுகிறதாம்!

எஸ். ஏ. பி. போலீஸ் படை உண்டு; சாதாரண போலீஸ் கூட்டம் ஏராளம், அவர்கள் வேறு தம்மாலியன்ற 'கைங்கரியங்களை' ஆங்காங்கு செய்து வருகிறார்கள். அதுவும் போதாதென்று, இராணுவமும் தேவைப்படுகிறதாம்! ஏனெனில்,

நாடு, நாம் சந்தோஷப்படுகிற நிலையில் இல்லையாம்!

மராட்டியம் மார் தட்டுகிறது, வங்கம் கொதித்தெழுகிறது, பீகார் முணுமுணுக்கிறது, பஞ்சாப் பற்றி எரிகிறது, தென்னாடு புகையும் எரிமலையாக இருக்கிறது, இந்த நிலைமைகளைப் பார்க்கிறபோது எப்படிச் சந்தோஷம் எழும்?

அந்தச் சந்தோஷத்தைப் பெற 'அசோகனின்' சக்கரத்தை இலச்சினையாகக்கொண்டிருக்கும் அமைச்சருக்கு இராணுவம் தேவைப்படுகிறதாம்! அனபு மார்க்கப் போதகனும புத்தனின் விழாவை ஆடம்பரத்தோடு அண்மையில்தான் கொண்டாடினார்கள் — அதற்குள் இப்படித் தெரிவிக்கிறார், காங்கிரஸ் அமைச்சர், நாடு சந்தோஷப்படக்கூடிய நிலைமையில் இல்லாததால், இராணுவத்தினரைக் குறைப்பதற்கில்லையாம!

அமைச்சர் மேலும் தெளிவாகவே தெரிவிக்கிறார்,

நாட்டின் பரப்பைப் பார்க்கிறபோது, இப்போதுள்ள இராணுவம் போதுமானதாக இல்லையாம்.

ஏதோ, இமய முதல் குமரி வரை இவர் படையெடுத்துக் கிளம்பயிருப்பது போலவும்; வங்கத்துக்கு ஒரு பட்டாளமும், பம்பாய்க்கு இன்னொரு படையும், தென்னாட்டுக்கு ஒரு கூட்டத்தையும், பஞ்சாபுக்கு மற்றொன்றையும் அனுப்ப வேண்டுவது போலவும்; அதற்குப் படை இல்லையே என்று கவலைப்படுபவர் போலவும் பேசுகிறார்.

எவ்வளவு, மமதை நிறைந்து வருகிறது டில்லிக்கு! மக்கள் பஞ்சாபிலும் மராட்டியத்திலும் இன்ன பிற இடங்களிலும், உரிமைக் குரலெழுப்பி வருகிறார்கள், இவர் தம் ஆட்சியின் போக்கில் அதிருப்தி கொண்டு கிளர்ச்சி செய்கின்றனர் என்றால், அவைகளைச் சமாளிக்க இராணுவம் தேவையாம் இவருக்கு! என்ன ஆணவம்? இது போல, என்றாவது ஹிட்லர் சொல்லியதுண்டா! முசோலினிதான், பேசினானா!

ரஷ்யாவும், பிரிட்டனும், அமெரிக்காவும், பிரான்சும், இராணுவங்களை வைத்திருப்பது — வெளிநாட்டுக்காரன் படையெடுத்தால், அவனிடமிருந்து நாட்டினைக் காப்பதற்கு.

இதற்காகத்தான் இங்கும் இராணுவம் வளர்க்கப்படுகிறது, என்று நினைத்து வந்தோம்.

இதோ டில்லி பீடம் தெரிவிக்கிறது, "அதற்காக மட்டுமல்ல இராணுவம். எமது ஆக்ஞையை மீறி நடந்தால், அவாகள் யாராயினும், உள்நாட்டுக்காரராயினும், காங்கிரசுக்குள்ளே இருப்பவர் என்றாலும், இராணுவம் உங்கள் பக்கம் திருப்பப்படும். கபர்தார்!", என்பதாக.

கூறுவது மட்டுமல்ல, கடந்த இரு மாதங்களுக்கு முனபு, பம்பாயில் நடைபெற்ற கிளர்ச்சியின்போது இராணுவம் அழைக்கப்பட்டதாம அரசாங்கத்தால்! கிளர்ச்சி நடந்த பம்பாயில் மட்டுமல்ல, எல்லா மாகாணங்களிலுள்ள சர்க்காருக்கும், "அவசியமானால், நீங்களும் இராணுவத்தையும் பயன்படுத்தலாம்", எனறு தந்திமூலம் பறந்ததாம் உத்தரவு.

ரஷ்யாவும, அமெரிக்காவுமாவது ஒன்றை ஒன்று அழித்துக் கொள்ள முயலுகின்றன. அதைத் தவிர்க்க, பஞ்சசீலம் பேசுகிறார், பண்டிதர்!

இங்கே அரசாங்கத்துடன் பொதுமக்கள் போர் தொடுக்கவில்லை — அவர்களிடம் இருப்பதெல்லாம், ஒலிபெருக்கியும் கண்ணீரும்தான்! வேதனையை எடுத்துப் பேசுவார்கள் — அப்படியும் அரசின் குரலில் ஏறாவிடில், கடையடைப்பு, உண்ணாவிரதம் இப்படி ஏதாவது செய்வார்கள்.

இப்படிப்பட்ட சாத்வீகமான மக்களை அடக்கி ஆள இராணுவம் வேண்டுமாம்!

ஏனெனில், இப்போது, நாட்டிலிருப்போர் இவர்கள் திணித்த மாகாணப் புனரமைப்புத் திட்டத்தை எதிர்க்கிறார்களல்லவா? அதனால், இருக்கும் இராணுவம் கூடப் போதாதென்கிறார், கட்ஜு!

நல்லோரும், வினோபா போன்ற காந்தியடிகளின் சீடர்களும், அனுதினமும் கூறி வருகிறார்கள், ஆண்டு ஒன்றுக்கு இராணுவத்துக்கென்று அழியும் 200 கோடியும் வீண் என்பதாக.

வீணாக்குவது மட்டுமா? அப்படிச் செலவழித்து வளர்க்கும் இராணுவத்தைக்கொண்டு ஏதாவது மீறி பேசினால், 'நாகநாடு' நடத்திக் காட்டுவோம், 'மராட்டியம்' உண்டு பண்ணுவோம் என்கிறார், கட்ஜு.

எவ்வளவு நெஞ்சுரம்! என்ன மனத் துணிவு இருக்கிறது, இப்படிச் சொல்ல!

அதை எண்ணிடும்போதுதான், டில்லி, ஏனிப்படி இராணுவத்தைக் கொழுக்க வைத்துக்கொண்டு வருகிறது எனும் உண்மை விளங்குகிறது.

மாகாணங்களின் மண்டையிலடித்துத் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட, இராணுவம, தேவையாயிருக்கிறது! யாராவது, நாகர்களைப் போன்றோ — மராட்டியரைப் போன்றோ, எழுந்தால் காட்கில் போன்ற காங்கிரசுக்காரரானாலும், கவலையின்றி, இராணுவம் ஏவப்படும்!

அப்பப்பா, டில்லியின் பாதையையும் சூது மதிகளையும் நினைத்தால் பயங்கரமாகத்தானிருக்கிறது.

இந்தப் பரிதாபத்தையெல்லாம் காண, நல்லவேளை, காந்தி உயிரோடில்லை. இருந்தால், நிச்சயம் கண்ணீர் வடிப்பார்! இராணுவத்தினரின் படையெடுப்புக்கு ஆளானாலும் ஆவார்!! ★

காஞ்சீபுரம்

8—7—'56

தம்பி !

மாமியார் வீட்டிலே மதிப்புப்பெற விரும்பிய மாப்பிள்ளை கதை தெரியுமா உனக்கு. கலியாண நாட்களிலே, கிராமத்துப் பெரியவர்கள் யாராவது கிடைத்தால் கேட்டுப் பார், சொல்லுவார்கள், சுவையாக இருக்கும்.

பொதுவாகவே, மாப்பிள்ளைக்கு மாமியார் வீட்டிலே மதிப்புப்பெறவேண்டும் என்பதிலே ஒரு அலாதியான ஆசை உண்டு; தன் வீட்டிலே அந்த மதிப்பு இல்லாமற்போனாலும் பரவாயில்லை, மாமியார் வீட்டிலே மதிப்புக் கிடைக்கவேண்டும் என்பதிலே மிகுந்த அக்கரைகொள்வான். நீண்டகாலமாகவே இருந்து வரும் ஒரு வேடிக்கையான சுபாவம்—பழக்கம்—முறை.

கவனித்தாயா, தம்பி, **மாமியார் வீடு** என்றுதான் சொன்னேன், **மாமனார் வீடு** என்று சொல்லவில்லை; காரணம் புரிகிறதல்லவா, மாமியார் தான் அங்கு ஆட்சி செலுத்துவது, மாமனார் வெறும் கிருஷ்ணமேனன் தான், இலாகா இல்லாத மந்திரி! இங்கும் அங்கும் சென்று மேலிடத்துச் செய்தியைக் கூறிவிட்டு வருவது!

மாமியார் வீட்டிலே மதிப்புப்பெற விரும்பாத மாப்பிள்ளை இல்லை; **மருதமுத்து** இதற்கு விலக்கல்ல; எனவே, தன் நண்பனிடம் கேட்டானாம், மாமியார் வீட்டிலே மதிப்புப் பெறுவதற்கு என்னடா வழி என்று. நண்பன், அந்தக் கிராமத்தில் 'ஆயிரந் தொழில்' தெரிந்த அனுபவசாலி என்று பெயரெடுத்தவன், அவன் சொன்னான், "மருது! மாமியார் வீட்டிலே மதிப்புப் பெறுவது மிகமிகச் சுலபமான காரியம். அங்கு எதை அவர்கள் அன்புடன் உபசாரத்துக்காகக் கேட்டாலும், வேண்டாம்! வேண்டாம்! என்று கூறவேண்டும்; பால் வேண்டுமா மாப்பிள்ளை! பதிர் பேணி வேண்டுமா மாப்பிள்ளை! லாடு கொஞ்சம் சாப்பிடுங்களேன் மாப்பிள்ளை — என்று மாமியார் சொன்னஉடன், பல்லை இளித்துக்கொண்டு, கொடுங்கள் கொடுங்கள் என்று கேட்டால், ஏதேது! இது சுத்தப் பஞ்சைபோல இருக்கிறது—என்று எண்ணிக்கொள்வார்கள்—மதிப்புப் பிறக்காது—பசியே வந்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும்—'பிகுவு'மட்டும் விடக்கூடாது" என்றான்.

மருதமுத்து, இதில் ஒரு கஷ்டமும் இல்லை; நாலு நாளைக்குப் பல்லைக் கடித்துக்கொண்டு இருக்கவாமுடியாது, என்று எண்ணிக்கொண்டு, மாமியார் வீட்டுக்குக் கிளம்பினான்.

சிம்மிலி—என்றோர் சுவையான பண்டம் செய்வார்கள், தம்பி, உனக்குத் தெரியுமோ என்னவோ! கேழ்வரகுடன் வெல்லமும், மணம் தர வேறு சில சில்லரைச் சரக்குகளும் கலந்து உரலிலிட்டு 'மசிய' இடித்து எடுப்பார்கள். பதமாகச் செய்தால், அந்த இனிப்புப் பண்டம், மணம் பெற்றுத் தனியானதோர் சுவை தருவதாக இருக்கும்.

இடிக்கும்போதே கிளம்பும் மணம், உரலைக் கழுவி உலர்த்தும் வரையில் இருக்கும்.

★ மாமியார் வீட்டில்....!

"மாப்பிள்ளை! சிம்மிளி சாப்பிடுங்கோ"

"உஹு-ம், வேண்டாம்"

"ரொம்பச் சுவையாக இருக்கும் மாப்பிள்ளே"

"வேண்டாம், வேண்டாம்! எனக்குப் பிடிக்காது"

"சிம்மிளியா பிடிக்காது;மணமாக இருக்கும், மதுரமாக இருக்கும், சாப்பிட்டுத்தான் பாருங்களேன, ஒரு விளாங்காயளவு"

"ஐயயே! எனக்கு அந்த 'நெடி'யே பிடிப்பதில்லை"

"எலுமிச்சம் பழ அளவாவது சாப்பிடுங்க. உங்களுக்காக எத்தனைக் கஷ்டப்பட்டு, நானே இடித்துச் செய்தது, மாப்பிள்ளை"

"தொந்தரவு செய்யாதீர்கள். எனக்கு இந்தப் பலகாரமெல்லாம் பிடிக்காது"

மருதமுத்து அபாரமான திறமையுடன் நடந்துகொண்டான்; பண்டத்தின் மணம் மூக்கைத்துளைத்தது, நாக்கில் நீர் ஊறிற்று, சபலத்துக்குத் துளியும் இடம் தரவில்லை, வேண்டவே வேண்டாம் என்று கூறிவிட்டான்.

இந்த ஒரு சம்பவம் போதும், மாமியார் வீட்டிலே தன் மதிப்பு வேகமாக வளரும் — அமெரிக்கக் கடன் கிடைத்தவுடன் டாட்டா கம்பெனி 'ஷேரின்' விலை ஏறுவதுபோல, மதிப்பு உயரும் என்று எண்ணிக்கொண்டான்.

"எவ்வளவு உறுதியாக இருந்துவிட்டோம்! நாக்கிலே நீரே ஊற ஆரம்பித்து விட்டது, அவ்வளவு மணம்; சுவைமிக்க பண்டம் தான்; சாப்பிட்டிருக்கிறேன் பல தடவை; எவ்வளவு தின்றாலும் தெவிட்டாது;—என்று மாப்பிள்ளை தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

வீணான பிகுவு

பிடிவாதம்

கௌரவம் பார்க்கிறார்.

என்று ஏதேதோ, பேசிவிட்டு,கணவன் ஆமோதிப்பைப் பெற்றுக்கொண்டு மாமியார் கண் அயர்ந்தாள், மகளைப் பக்கத்தில் படுக்க வைத்துக்கொண்டு!

உரல், அழைக்கலாயிற்று மாப்பிள்ளையை!

மணம், காற்றடிக்க அடிக்க, 'கமகம'வெனக் கிளம்புகிறது, மாப்பிள்ளையின் மூக்கைத் துளைக்கிறது, நாவில் நீர் ஊறுகிறது, பண்டத்தின் சுவைபற்றிய எண்ணம் வந்து தாக்குகிறது! புரண்டு புரண்டு படுக்கிறார் மாப்பிள்ளை, விடுவதாக இல்லை, மணம்!

கொஞ்சம் சாப்பிட்டிருக்க வேண்டும்!

ஒரு விளாங்காய் அளவு!

எலுமிச்சம் பழ அளவாவது சாப்பிட்டிருக்கலாம்.

மாமியார், கெஞ்சித்தான் கேட்டாள்.

நான்தான் சற்று அதிகமாகவே 'பிகுவு' காட்டிவிட்டேன்.

இந்தச் சனியன், மூக்கைத் துளைத்து,நாக்கைக்கொட்டுகிறது.

மாப்பிள்ளை, பாபம், 'சிம்மிளி' தவிர வேறு எதுபற்றியும் எண்ண முடியாத நிலைபெற்றுப் பரதவித்தான்.

விசித்திரமான யோசனை — நிலைமைக்கு ஏற்றபடி—எழுந்தது அவன் உள்ளத்தில்.

உரலில், சிம்மிளி கொஞ்சமாவது ஒட்டிக்கொண்டு இருக்குமல்லவா!

எவ்வளவு திறமையாக வழித்தெடுத்துவிட்டாலும், சிறிதளவாவது நிச்சயம் உரலில் இருக்கத்தான் செய்யும்—கிடைக்கும்—அதையாவது எடுத்து, வாயில் போட்டுக்கொண்டால்தான், இந்தப் பாழும் ஆசை தீரும் என்று எண்ணினான்; அடுத்த விநாடி, மெள்ள, பூனைபோல நடந்தான், உரல் இருக்கும் இடத்துக்கு.

"எனக்குத் தெரியுமடா மாப்பிள்ளை! நீ குஞ்சாலாடு, குலாபஜான், அதிரசம், ஆமவடை, எதை வேண்டுமானாலும், இழக்கலாம், என்னைமட்டும் விட்டுவிட, உன்னைவிட 'வீராப்பு' கொண்டவர்களாலும் முடியாது; ஓசைப்படாமல் நடுநிசியில் வருகிறாயா, வா! வா!" என்று மணம் அழைத்தது; மாப்பிள்ளை சுற்றுமுற்றும் பார்த்தபடி, உரலருகு சென்று, கரத்தைவிட்டு உள்ளே துழாவினான் — அடியில் சிறிதளவு ஒட்டிக்கொண்டிருந்தது வழித்தெடுக்க எளிதாக இல்லை! எடுப்பதற்கு முடியாத நிலை, அவனுடைய ஆசையை ஆயிரமடங்கு அதிகமாக்கிவிட்டது. உரலடியிலே இருப்பதால், மணம் மிகவும் தொல்லைதந்தது, நாவிலிருந்து சொட்டுக்களே விழ ஆரம்பித்தன. ஆவல் மிகுதியால், தலையைக் குனிந்தான—மேலும் மேலும்—அடியில் ஒட்டிக்கொண்டிருக்கும் 'சிம்மிளி'யைக் கண்டறிந்து எடுக்க!

அப்பாடா! கிடைத்தது! மகிழ்ச்சியுடன் மாப்பிள்ளை, நிமிர்ந்திடலானான்—முடியவில்லை —தலை 'கலவடை'யில், உரலின் மேல் பாகத்தில் மாட்டிக்கொண்டது, வரவில்லை.

"ஐயோ!" என்று அலறிவிட்டான்—என்ன? என்ன? என்று கேட்டபடி, ஓடிவந்த மாமியார், மாப்பிள்ளை இருக்கும் 'கண்றாவிக்' கோலத்தைக் கண்டு விழுந்து விழுந்து சிரித்தாளாம்.

மாமியார் வீட்டிலே மதிப்புப் பெற மதிகெட்ட மாப்பிள்ளைகள் முயற்சித்து இவ்விதமான அலங்கோலப்படுவதுண்டு.

நமது காங்கிரஸ் தலைவர்கள், டில்லியிடம் மதிப்புப்பெற, பல்வேறு விதமான முயற்சிகள், விசித்திர விசித்திரமாக எடுத்துக்கொண்டு, பல தடவைகளில், கதையில் காணுகிறோமே 'மாப்பிள்ளை' அது போலாகிவிடுகிறார்கள், அப்படியானால், அண்ணா! மாமியார் வீட்டிலாகட்டும், டில்லியிலாகட்டும், 'மதிப்பு'பெற என்னதான் சரியான வழி சொல்லு கேட்போம் என்று கேட்டுவிடாதே, தம்பி, நான் அந்த 'வித்தையைக் கூற அல்ல இதைச் சொன்னது.

மதிகெட்ட மாப்பிள்ளையைப்போல!

மதிப்பு கிடைக்கவேண்டும் என்ற மன அரிப்பு எடுத்து விடுகிறது காங்கிரஸ் தலைவர்களுக்கு அதனாலே, பாபம் அவர்கள், 'கலவடை'யைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு கலங்கிய மாப்பிள்ளை போலாகி விடுகிறார்கள் பல சமயங்களில்.

இதற்கு, எந்தக் காங்கிரஸ் தலைவரும் விதிவிலக்கு அல்ல.

ஒவ்வொருவருக்கு ஒவ்வோர் முறை இருக்கிறது, அவரவர் திறமை, பழக்கம், பயிற்சிக்குத் தக்கபடி — ஆனால் ஒவ்வொருவரும் எப்படியாவது, டில்லியின் மதிப்பைப் பெற வேண்டும் என்று முயற்சித்தபடி இருக்கிறார்கள்.

இதிலே சுவையான பகுதி என்ன தெரியுமோ? எனக்குத்தான் டில்லியில் மதிப்பு அதிகம்—அவரைச் சீந்துவதில்லை—என்னிடம் தான் டில்லிக்கு நம்பிக்கை—அவரிடம் ஒரு துளியும் நம்பிக்கை கிடையாது — என்று ஒவ்வொரு தலைவரும் எண்ணிக் கொள்வதும், நண்பர் குழாத்திடம் கூறிக்கொள்வதும்தான்!

டில்லியோ, 'தட்டிவிட்டு' வேடிக்கைபார்ப்பது,பலனும் சுவையும் தருகிறது என்பதை நன்கு அறிந்து கொண்டு விட்டது.

எந்தக் காங்கிரஸ் தலைவர் எந்தச் சமயத்தில், ஆட்சிப் பீடத்தில் இருக்கிறாரோ, அவரிடம் டில்லி மதிப்பு, அன்பு, நம்பிக்கை, இருப்பதாகக் காட்டிக்கொண்டே இருக்கும்—எது வரையில்?—அவர் 'பரிபூரண அடிமை'யாக இருக்கும் வரையில் — அவர் உள்ளத்திலே ஒரு துளி சுதந்திர உணர்ச்சி—தன்மானம்—துளிர்க்கிறது என்று தெரிந்தால் போதும், அவர்மீது பாயச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கும் 'ஆசாமிகள்' இருக்குமிடம் நோக்கி, புன்னகை பொழியும், கருணையைக் காட்டும், கண் சிமிட்டும்!! பதவிக்கு ஆபத்து வந்துவிடும் என்று பயம் பிடித்துக் கொண்ட நிலையில் மீண்டும் பணிய, குனிய, குழைய, கெஞ்சிட, முன்வந்து, 'மதிப்பு'ப் பெற முயற்சி எடுத்துக் கொள்வர், பதவிப் பசையில் சிக்கிக்கொண்டோர்! பதவிப் பசி எமக்கு இல்லை என்று கூறிடவும், அந்த உறுதியுடன் நடந்திடவும் முனைவரேல், பாய்ந்து பிய்த்துத் தின்றிடக் காத்துக்கிடப்போரிடம், டில்லி பாசவலை வீசும்—நாச வேலையை, அவர்கள் வெற்றிகரமாக்கிக் காட்டுவர்.

காஷ்மீரச் சிங்கமென்று உலகுக்கே அறிமுகப்படுத்தப் பட்டவர், வகுப்புவாதப் பேயைச் சாடிச் சாடி ஓட ஓட விரட்டி அடிக்கும் மந்திரவாதி என்று தமிழகத்துக்கு அழைத்துக்கொண்டு வரப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டவர், ஜனாப் ஜின்னாவின் செல்வாக்கையே சின்னாபின்னமாக்கத் தக்கவர் என்று இஸ்லாமிய உலகுக்கு 'சிபாரிசு' செய்யப்பட்டவர் தம்பி, ஷேக் அப்துல்லா! பாபம்! வழக்கு இல்லை, விசாரணை இல்லை, உள்ளே சென்ற நாளைக்கூட உலகம் மறந்துவிட்டது, சிறையிலே தள்ளப்பட்டிருக்கிறார்—காரணம்?—அவர் சிறிதளவு உரிமை உணர்ச்சியை வெளியிட்டார்—டில்லி, ஒரு குலாம் பக்ஷியைப் பிடித்திழுத்து வந்து பீடத்தில் அமர்த்திவிட்டது!

ஷேக் அப்துல்லாவின் கதியைக் கண்ட பிறகு, ஒவ்வொரு மாநிலக் காங்கிரஸ் அமைச்சர்களுக்கும் 'அஸ்தியில் ஜுரம்' கண்டு விட்டது!! எந்தச் சமயத்தில், என்ன காரணத்தால், டில்லிக்குக் கசப்பு வந்துவிடுமோ — டில்லிக்கு என்னென்ன வகையான இனிப்பு ஊட்டவேண்டுமோ — யாரேனும் ஏதேனும் போதனை செய்துவிடுவார்களோ-என்ற திகில் குடைந்தபடி இருக்கிறது. இதை நன்கு தெரிந்து கொண்ட டில்லி, இவர்களை ஆட்டிப்படைக்கிறது. இதை மக்கள் எங்கே தெரிந்துகொண்டுவிடுகிறார்களோ என்ற பயம் வேறு இவர்களைப் பிடுங்கித் தின்கிறது! எனவே டில்லி நோக்கிப் பல்லைக் காட்டுவதும், இங்குள்ள மக்களை நோக்கிப் படாடோபம் வீசுவதுமாகக் காலந்தள்ளியபடி உள்ளனர். சிரமமான வேலை! ஆனால் செய்து தீரவேண்டியதாக இருக்கிறது, அவர்கள் பால், தம்பி, ஒரு வகையில் நாம் பச்சாதாபம் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால், தம்பி. நாம் மருதமுத்துவைக் கேட்போம், இதற்கான விளக்கம் கூறுவான்.

"மருதமுத்து! மாமியார் வீட்டிலே மதிப்புப் பெற வேண்டும் என்று, ஏனப்பா, முயற்சி எடுத்துக் கொண்டாய்? ஏன் உனக்கு அந்த எண்ணம் தோன்றிற்று?"

"உண்மையைச் சொல்லிவிடுகிறேன். மாமியார் வீட்டார் என்னை மதிக்கமாட்டார்கள் என்றோர் பயம் எனக்கு. படிப்பு அதிகம் இல்லை. பண வசதியும் மட்டு. எந்த விதமான புகழ்பெறவுமில்லை! வாத நோய் வேறு என் உருவத்தைக் கெடுத்து விட்டது! — இதனால், மாமியார் வீட்டிலே மதிப்பாக நடத்த மாட்டார்களே, என்ற பயம், சந்தேகம் எனக்கு".

மருதமுத்துவாவது தன் உயிர்த்தோழனிடம் இந்த உண்மையைக் கூறுவான்—நமது காங்கிரஸ் தலைவர்கள் மட்டும் உண்மையைக் கூறமாட்டார்கள்!!

ஆனால், ஒருவர்மீது ஒருவர் 'சாடி' சொல்லும்போது மட்டும், உண்மையைக் 'கசிய' விடுவார்கள்.

தட்சிணப் பிரதேசத் திட்டத்தை, நிதி மந்திரி சுப்ரமணியமும், சேதுபதியும் ஆதரித்துப் பேசினர் — காரணங்கள் கூடக் காட்டினர் — அவர்களை மறுத்த முதலமைச்சர் தட்சிணப் பிரதேசத் திட்டம் இத்தகைய கேடுபயப்பது என்று விளக்கினாரா? இல்லை! தட்சிணப் பிரதேசத் திட்டத்தை எதிர்த்து தமிழகத்தில் எல்லாக் கட்சிகளும் (சர்க்கார் கட்சியும் சல்லாபக் கட்சியுந் தவிர) நடத்திய வெற்றிகரமான 'அர்த்தால்' மூலம், தமிழகம் தட்சிணப்பிரதேசத் திட்டத்தை வன்மையாகக் கண்டிக்கிறது என்பது விளங்கிவிட்டது, நாடே எதிர்க்கிறபோது, அந்தத் திட்டத்தை நான் எப்படித் திணிக்க முடியும், என்று விளக்கம் அளித்தாரா? இல்லை! ஆனால் என்ன காரணம் காட்டினார்?

காஷ்மீரச் சிங்கத்தின் கதி என்ன?

டில்லி சர்க்காரை களிப்படையச்செய்து, அங்கு பெரிய மந்திரிவேலை பெறலாம் என்ற ஆசையால் சில பேர் தட்சிணப்பிரதேசத்தை ஆதரிக்கிறார்கள்!!

இத்தகைய சபலம்கொண்ட, பதவிமோகம் பிடித்தலையும், 'உதவாக்கரை'களை, சகாக்களாகக் கொண்டு அமைச்சர் குழுவினை நடத்திச்செல்வது, காமராஜருக்கே இழுக்கல்லவா?—என்று நாம் ஏன் கேட்கவேண்டும் தம்பி, கேட்டால், அவர் "நான்தான் பச்சையாகச் சொன்னேனே, இதுகள் உதவாக்கரைகள். பதவி மோகம் பிடித்தலைபவர்கள்!" என்று. 'ரோஷம்' இருந்தால், அவர்களல்லவா, இப்படி எங்களை அலட்சியப்படுத்தி, பொதுமக்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியவரின் தலைமையில் நாங்கள், கேவலம் சில ஆயிரம் ரூபாய்களுக்காக, தன்மானத்தை இழந்து மந்திரிவேலை பார்க்கமாட்டோம்—பண்புதான் பெரிது, பதவி அல்ல! மானம் உயிரினும் பெரிது என்று போற்றிடும் தமிழ் மறக் குடியினர் நாங்கள், எங்களைப் பதவிப் பித்தர்கள், உதவாக்கரைகள் எனறு பொதுமக்கள் முன்னிலையில் முதலமைச்சர் சொல்லியானபிறகும் நாங்கள், பதவியில் இருத்தல், மிக மிகக் கேவலம், இதோ எங்கள் 'ராஜிநாமா'க் கடிதம்!! — என்று கூறி விலகல் கடிதத்தை என் முகத்தில் விட்டெறிந்துவிட்டு, வீரதீரமாய், மந்திரிசபையிலிருந்து வெளியேறிவிடுவதுதானே! வீரப்பேச்செல்லாம், நான் சவுக்கடி கொடுத்ததும், 'விக்கல், விம்மல்' ஆக அல்லவா மாறிவிட்டது!!" என்று சொல்லக் கூடும்.

அதிலே உண்மை இருக்கத்தானே செய்கிறது, தம்பி! உண்மையாகவே, தட்சிணப் பிரதேசத்திட்டத்தில், இந்த அமைச்சர்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருக்குமானால், அதை மக்களிடம் விளக்கிப் பேசியதற்காக, உதவாக்கரைகள் என்றும், மேலிடத்துக்கு மனுப்போடுபவர்கள் என்றும், டில்லியில் மந்திரிவேலை தேடுபவர்கள் என்றும், என்றையத்தினம் முதலமைச்சர், ஒளிவுமறைவு இன்றி, மக்கள் மன்றத்திலேயே எடுத்துரைத்தாரோ, அப்போதே அல்லவா, அமைச்சர் பதவியை உதறித்தள்ளிவிட்டு, தமிழினம் தன் பண்பினை இழந்துவிடவில்லை, எம்மைக் காணீர்!—என்று அறிவித்திருக்கவேண்டும்.

தட்சிணப்பிரதேசத் திட்டத்துக்கு ஆதரவு வளருமோ இல்லையோ, நிச்சயமாக, தமிழ் இனத்தின் மாண்பல்லவா உயர்ந்திருக்கும்! கொங்குநாடு, விழாவே கொண்டாடி இருக்கும் — எமது திருமகன், சென்னை நிதி டில்லி நிதி இரண்டும் தந்து, தில்லியேரடு தமிழாளத் தருவரேனும், பங்கமுற வேண்டுமெனில், பதைத்தெழுவார், பதவியினைத் துச்சமென வீசிடுவார், என்று பதிகமேபாடும்! தென் பாண்டிமண்டிலம், சேதுபதி, குலப்பெருமையை, குடிப்பெருமையை, நிலை நாட்டிவிட்டார் என்று குதூகலித்திருக்கும்! இந்திய துணைக்கண்டமே, இவ்விருவரின் பெயர் கூறி வியந்திருக்கும். ஆனால், தம்பி, பாபம், மாவட்டக் கலெக்டரிடம்

டாமிட்

நான்சென்ஸ்

இடியட்

கூஸ்

என்றெல்லாம் 'வசைமொழி, கேட்டுக்கொண்டும், வேலையை விட்டுவிட்டால் வேட்டிதுவைத்துப் பிழைக்கவும் முடியாதே என்றெண்ணி, நம் விதி! துரை, ஏதோ கோபத்தில் இருக்கிறார்! என்று சமாதானம் கூறிக்கொண்டு, வேலை பார்த்துவரும் தாசில்தார் போலல்லவா, நிதி அமைச்சர் நடந்துகொண்டார் — சேதுபதியுமல்லவா அவர் வழி சென்றார்!

ஏட்டிலேயும் சரி, நாட்டு நடப்புகள்பற்றிக்கூறிடும் நாளிதழ்களிலும் சரி, ஒரு முதலமைச்சர் இவ்வளவு வெளிப்படையாக, உதவாக்கரைகள்—பதவிக்காக அலைபவர்கள்—என்று பேசியபிறகும், பதவியில் ஒட்டிக்கொண்டு இருக்கும், மந்திரிகளை, நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை!

நானறிந்தவரையில், நாக்கில் நரம்பின்றி பலர் எந்த ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களை இழித்தும் பழித்தும் பேசினரோ, அவர்களில் ஒருவரிடமாவது "சொரணைகெட்டதனமும்", "பதவிக்காக மானத்தை இழந்திடும் கெடுமதியும்" இருந்ததில்லை.

யாரோ ஒரே ஒரு உறுப்பினர் தான், 'நம்பிக்கையில்லை' என்று முணுமுணுத்தார் — அதுகேட்ட நமது மறைந்த மாவீரர் பாண்டியன், அந்நாளே, மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் பதவியை உதறித் தள்ளிவிட்டு, தமிழ்ப் பண்புக்கு உள்ள, உரத்தை உலகறியச் செய்தார்!

இதோ இரு அமைச்சர்கள்! முதலமைச்சர் வீசிய சிறு சொல்லைக் கவனித்தால் பில்லைபோட்ட சேவகன் எங்கிருந்து கிடைப்பான் என்று கேட்கிறார்களே! இந்த இலட்சணத்தில், எதிர்க்கட்சிகளை ஏளனம் செய்ய நாக்குவேறு நீளுகிறது!!

"சரி, சரி, சந்தடி சாக்கிலே கந்தப்பொடி விற்கக் கிளம்பிவிடாதே! நாங்கள் உதவாக்கரைகள், பதவிக்காகப் பல் இளிக்கிறோம், என்று அவர் கூறிவிட்டார்—சரி என்றே வைத்துக்கொள்வோம்—இப்படிப்பட்ட எங்களை ஏனய்யா, இந்த வீராதி வீரர், விரட்டக் கூடாது? நாங்கள் இன்னமும் மந்திரிசபையில்தானே இருக்கிறோம்! உதவாக்கரைகளை ஏன் வைத்துக் கொண்டிருக்கவேண்டும்? தைரியமிருந்தால், எங்களை போகச்சொல்லட்டும்! பார்ப்போம்! போகச்சொல்லட்டும். அப்போது, நமது சக்தி என்ன, நமக்கு இருக்கும், "ரதகஜ துரகபதாதிகள்" எப்படிப்பட்டது என்பதைக் காட்டுவோம்! முதலமைச்சர் பதவி இவருக்கு நிலைக்கிறதா என்பதையும் பார்த்துவிடு

வீசியெறிவதுதானே பதவியை!

வோம் என்றுதானே நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம்" என்று நிதி அமைச்சர் பேசக்கூடும்.

இதிலும், உண்மை இல்லாமற் போகவில்லை!

இந்த அமைச்சர்கள், உதவாக்கரைகள், ஊறு செய்தேனும் உயர்ந்த பதவி தேடுபவர்கள் என்பது முதலமைச்சருக்குத் தெரிந்திருக்கும் போது, அதை மக்களுக்கே தெரிவித்தாக வேண்டும் என்று அவருக்குப் பொறுப்புணர்ச்சி பொங்கி வழிந்திருக்கும் போது, அவர் நிச்சயமாகச் செய்திருக்க வேண்டியது, ஊசல் பண்டத்தைக் குப்பையில் போட்டுவிட்டேன், உடைந்த பாண்டத்தை வீசி எறிந்து விட்டேன், உதவாக்கரைகளை, விரட்டி விட்டேன், என்றல்லவா ஊராருக்கு அறிவித்திருக்க வேண்டும்? செய்யவில்லையே!! ஏன்? சிந்தையில் நடுக்கம் என்கின்றனர் சிலர்.

அது எப்படியோ போகட்டும், மக்கள் என்ன எண்ணிக்கொள்வார்கள்? உதவாக்கரைகள் என்று முதலமைச்சரால் ஏசப்படுபவர்கள் நிதி, மதி ஆகியவற்றின் காவலர்களா!! என்ன அக்ரமமய்யா இது! இவர்கள் இத்தகைய பதவிப் பித்தர்கள், பயனில் மாந்தர் என்று தெரிந்தும், இவர்களை ஏன், ஆளச் சொல்கிறீர்கள்? — என்று கேட்கமாட்டார்களா? கேட்கிறார்கள்!!

ஆனால் ஏன் இந்தக் கூத்து நடைபெறுகிறது— **டில்லியில் யாருக்கு மதிப்பு** என்பதைக் கண்டறியும், பலப் பரீட்சையில, இருதரப்பினரும், ஈடுபட்டுள்ளனர், இதில் எந்தப் பக்கம் டில்லி சாய்கிறதோ, அந்தப் பக்கம் வலிவு பெறும்—இதுதானே இன்றுள்ள நிலைமை!!

டில்லிக்கு இந்த 'வாய்ப்பு' இருப்பதனால் தான், இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள், டில்லியின் மதிப்பினைப் பெற, பல்வேறு வகையான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள்— சில சமயங்களில் கதையில் கண்டோமே 'மாப்பிள்ளை' — அது போன்ற கண்றாவியும் நேரிட்டு விடுகிறது.

காந்தியார் காலத்தில் ஒருமுறை, ஆச்சாரியார் காமராஜர் தகராறு கிளம்பி, ஊர் சிரிப்பாய்ச் சிரித்தது. தம்பி! கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது என்று அப்போது நான் ஓர் தலையங்கம் தீட்டினேன்.

ஆச்சாரியார், அப்போது காந்தியாரின் மதிப்பினைப் பெற்றிருந்தார் —எனவே, காமராஜர் மீது காந்தியார் கண்டனத்தை வீசினார்!!

சூழ்ச்சிக்காரக் கும்பல் — என்ற பொருள் பட, காமராஜர் மீது காந்தியார் கண்டனம் வீசினார்.

சின்னத் தலை படைத்த பெரிய தலைவர்! —என்று காமராஜர் குறித்து, கல்கி எழுதினார்—படமும் தீட்டினார். அது பழங்கதை! ஆனால் முற்றுப்பெறாதது!!

இப்போதும் அதே போன்ற 'சூழ்நிலை' உருவாகிக்கொண்டு வருகிறது என்பது சிறு சிறு செய்திகள் மூலம் தெரிகிறது! அப்போது போலவே இப்போதும், **டில்லியில் மதிப்பு எப்படிப் பெறுவது?** என்பதுதான், போர்முறையாகவும், வாழும் வழியாகவும் இருந்து வருகிறது.

இதிலே, யார் வெற்றி பெறுகிறார்கள் என்பதல்ல முக்கியம்— நாம், தம்பி, எந்தத் தரப்புக்கும் முட்பொறுக்கி வேலைக்காக முந்திக்கொண்டிருக்கவில்லை — நான் இதிலே தொக்கி நிற்கும் வேறோர் பிரச்சினையைக் கவனிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். வெற்றி மாலையும் வீர கண்டா மணியும் யாருக்குக் கிடைக்கிறது என்பதல்ல பிரச்சினை—டில்லியிடம் மதிப்புப் பெறுவதுதான், இங்கு செல்வாக்கு நிலைத்திருக்கச் செய்வதற்கான வழி என்ற கேடான, கேவலமான, சூழ்நிலை இருக்கிறதே, இதைக் கவனிக்கவேண்டும்—இதுதான் மக்கள் கூர்ந்து பார்த்திட வேண்டிய பிரச்சினை.

எத்துணைதான் 'தேசீயம்' கொண்டிருப்பினும், நாட்டின் பல்வேறு துறைகளிலும், குறிப்பாக, மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் வாய்ப்புகளாக உள்ள எந்தத் துறையினைக் கவனிக்கும்போதும், வடநாடு தலைமைப்பீடமாகி ஆதிக்கம் செலுத்துவதையும், தென்னாடு அடிமையாகி அடங்கி ஒடுங்குவதையும், காணாமலிருக்க முடியாது! காங்கிரஸ்காரர்கள்கூடத் தான்!! அந்தவெட்கக்கேடு நமக்குத் தெரிந்துவிடக்கூடாது என்பதிலே அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி நம் எதிரே, ஏதும்வேதனையற்றோர் போல நடிக்கிறார்கள் – உள்ளூர அவர்கட்கும் வேதனை பீறிட்டு எழத்தான் செய்கிறது.

'அகில இந்தியா'—என்ற அடைமொழியுடன் இயங்கும் எந்த அமைப்புக்கும், தம்பி, தலைமை வடக்கிலேதான்.

இங்கே பேரறிவாளர் உளர்—வீரர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்! ஆனால் அவர்கள் செக்கிழுக்க! தலைமை தாங்கவோ, வடநாடுதான், அருள்கிறது!!

அகில இந்திய காங்கிரசுக்குத் தலைவர்—தேபர்—வடநாட்டார்!

அகில இந்திய முதலமைச்சர்— **நேரு பண்டிதர்**—வடநாட்டவர்.

அகில இந்திய கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் தலைவர்—**அஜாய்கோஷ்!**

அகில இந்திய பிரஜா சோஷியலிஸ்டுகளை நடத்திச்செல்ல, **ஜெயப்பிரகாஸ் நாராயண், கிருபளானி, அசோக் மேதா!!**

அகில இந்திய சோஷியலிஸ்டுக் கட்சிக்கு, **டாக்டர் லோகியா!**

அகில இந்திய இந்துமகா சபையை நடத்திச் செல்ல **கோல்வால்கர்!**

இராமகிருஷ்ண மடாலய இயக்கம், ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், அகில இந்திய இந்தி பிரச்சார சபா—எதிலும், தலைமை அமைந்திருப்பது வடக்கேதான்!

உன்னிடம் உண்மையைச் சொன்னால் என்ன, தம்பி, நான் சின்னாட்களுக்கு முன்பு **வினோபாவைக்** கண்டேனல்லவா — பெருமதிப்பு கொண்டேன் – எனினும்

எதற்கும் தலைமை வடக்கே!

என் உள்ளத்திலே ஓர் எண்ணம் தோன்றி என்னை உறுத்தத்தான் செய்தது.

ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்திருக்கிறார் வினோபா.

மொழியால், மாநிலத்தால் பழக்க வழக்கங்களால், வேறுபட்டவர், எனினும் அவர் ஈடுபட்டுள்ள காரியம் மக்கள் தொண்டு என்று தெரிந்தவுடன், நம் தமிழகத்துச் சிற்றூரில், அவர் வருகையை விழாவாக்கி, அவர் பேச்சை உபதேசமாகக்கொண்டு, அவர் காட்டும் வழி நடக்க முயற்சிக்கிறார்கள்.

தமிழகத்துச் சிற்றூர்களிலெல்லாம், சொந்தத்துடன் பந்தத்துடன் அவர் வருகிறார்—வரவேற்கும் பெரிய உள்ளம் நமது மக்களுக்கு இருந்திடக் காண்கிறேன்.

இதைக் கண்டபோது நான் எண்ணிக்கொண்டேன், கடந்த நூறு ஆண்டுக் காலத்தில் இதுபோல ஒரு தமிழர் — வடநாட்டில், குக்கிராமங்களிலும் வரவேற்கப்பட்டு, 'பவனி' நடத்தியதுண்டா? இப்போதாவது முடிகிறதா!

திருக்குறளையும் திருவாய்மொழியையும் தாம் கற்றறிந்ததைத் தமிழரிடம், தமிழகத்தில், வினோபா எடுத்துக் கூறுகிறார் — போற்றுகிறோம் — பூரிக்கிறோம்— புனிதனே! என்று மக்கள் கொண்டாடுகின்றனர்.

இதே திருக்குறளையும் திருவாய்மொழியையும்—மாமேதை என்று புகழ் பெற்றுத் துலங்கும் ஆச்சாரியார், வடநாட்டிலே, (களக்காட்டூர், காட்டூர், தம்மனூர், வயலூர் போன்ற) சிற்றூர்களில் சென்று எடுத்துக்கூற இயலுமா? அங்கு உள்ள வடநாட்டு மக்கள், அவரை வாழ்த்தி வரவேற்க இசைவரா?

அங்கே இருந்துதான் அறிவு ஒளியும் அன்பு நெறியும், அரசியல் முறையும் பொருளாதார வழிவகையும் அளித்திட இங்கு 'தலைவர்கள்'—வருகின்றனர்—இங்கிருந்து, அங்கு? ஏக்கமன்றி பிறிதென்ன பதிலுளது!

வினோபாவைக் கண்டபோது, என் மனதில் இந்த எண்ணம் எழத்தான் செய்தது.

எந்தத் துறையிலும், வடக்கு தலைமை தாங்க, நடத்திச் செல்ல, ஆதிக்கம் செய்ய, இடமளித்தான பிறகு, டில்லியில் மதிப்புப் பெற்றாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம், ஏற்பட்டுவிடத்தானே செய்யும். எனவேதான் காங்கிரஸ் தலைவர்கள், டில்லியின் தயவைப்பெறத் தவங்கிடக்கிறார்கள்,

பாரேன் ஒரு சம்பவத்தை.

தேவிகுளம், பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழருக்குத்தான் என்று, எவ்வளவு அறிவாற்றலுடன், ஆர்வத்துடன், மக்களிடம் பேசினர்—காமராஜரும் அவருடைய உதவாக்கரைகளும்!

மார்தட்டிப் பேசினார்கள், எங்களுக்கு யாரும் எடுத்துக் கூற வேண்டியதில்லை —யாமறிவோம்— எமக்குத் தெரியும் — எம்மால் ஆகும் — என்றெல்லாம் முழக்கமிட்டனர்.

தேவிகுளம், பீர்மேடு தமிழருடையதுதான் இவை கிடைத்தாக வேண்டும் — கிடைத்தே தீரும்—பெற்றே தீருவோம்—பெற்றிட எம்மால் முடியும் — எம்மால்தான் முடியும்—இதைச் சாக்காகக்கொண்டு எதிர்க் கட்சிகள் ஊளையிட வேண்டியதில்லை—என்றெல்லாம் 'கர்ஜனை' புரிந்தனர், காங்கிரஸ் மந்திரிகள்!

சட்டசபைகளிலே தீர்மானம் நிறைவேற்றினர்.

தமிழ்நாடு காங்கிரஸ் குழு தீர்மானம் நிறைவேற்றிற்று!

எல்லாவற்றினையும் வழித்தெடுத்துச் சாக்கடையில் போட்டது டில்லி!

என்ன செய்தனர்? காமராஜரும் சரி, உதவாக்கரைகளும் சரி, என்ன செய்தனர்? என்ன செய்ய முடிந்தது?

குளமாவது, மேடாவது—என்று பேசினார் காமராஜர்.

கேட்டுப் பார்த்தோம், கிடைக்கவில்லை—என்றார் நிதி அமைச்சர். மற்ற அமைச்சர்கள், இதைத்தான் சொல்வானேன் வாய்தான் வலிப்பானேன் என்று இருந்துவிட்டனர். ஏன்? டில்லியின் தயவு வேண்டும்!

நல்ல பிள்ளைகள்! நமது சொல் தட்டாதவர்கள், குட்டினாலும், கும்பிடுபோடும் குணாளர்கள், — என்று டில்லி அறிந்திட வேண்டும். அந்த நல்லெண்ணம், ஆயிரம் தேவி குளத்துக்குச் சமானம்!— என்றுதான் எண்ண முடிந்தது.

அதோ, வடக்கே பார் தம்பி அங்கேயும் காங்கிரஸ் தலைவர்கள் இருக்கிறார்கள்—காங்கிரசை மீறியும் தலைவர்களானவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்!! என்ன சொல்லுகிறார்கள், கேட்கிறதா!

ஒரு கணம், காட்கிலின் முழக்கத்தைக் கேட்டால் கோழையும் வீரனாவான்!!

கட்சி பெரிதுதான், ஆனால் உரிமை அதனினும் பெரிது, என்கிறார்.

நேரு என் தலைவர், சரி, ஆனால் மராட்டியம் என் தாயகம்! அதற்கு நான் துரோகம் இழைக்கமாட்டேன் என்கிறார்.

கிளர்ச்சி ஓயவில்லை—அறப்போர் நடந்தவண்ணமிருக்கிறது— ஆயிரக்கணக்கிலே அணிவகுத்து நிற்கின்றனர்.

தேஷ்முக்—பம்பாய் மராட்டியருக்கு இல்லை என்றால் நான் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க முடியாது— நான் மராட்டியன்!—என்று முழக்கமிடுகிறார்.

பஞ்சாப், வங்காளம், பீகார்— எங்கும், தம்பி, உரிமை பறி போகிறது என்று தெரிந்ததும், துடித்தெழுந்து, தடுத்து நிறுத்துவோம் என்று முழக்கமிடத் தலைவர்கள் இருக்கிறார்கள். இங்கோ, தாசர் புத்தி தலைக்கேறிவிட்ட நிலையில், குளமாவது மேடாவது, எனக்குப் பதவி போதும் என்று கூறிடத்தான் 'தலைவர்கள் இருக்கிறார்கள்.

அஞ்சா நெஞ்சம் கொண்டவர்கள் அங்கே!

தாயகம் பெரிது; நேரு புகழல்ல!

கெஞ்சிக் கூத்தாடி பஞ்சைப் புத்தியைக் காட்டுவோர் இங்கே!!

பொதுவாக, தென்னுட்டில் வடநாட்டு மக்களும் வடநாட்டுத் தலைவர்களும் அடைந்துள்ள கௌரவம் வடநாட்டில் தென்னுட்டு மக்களும் தென்னுட்டுத் தலைவர்களும் அடையவில்லை. நம் நாட்டைப் பற்றியும் நமது பண்பாட்டை பற்றியும் வடநாட்டில் உள்ள பொதுமக்களுக்குப் பொதுவாக ஒன்றுமே தெரியவில்லை என்று சொன்னல் மிகையாகாது. அப்படி நம்மைப் பற்றித் தெரிந்து கொண்டிருப்பவர்களும் நல்ல முறையில் தெரிந்து கொண்டிருக்கவில்லை என்பதைப் பார்க்கும் போது மனத்துக்குச் சலிப் பாகத்தான் இருந்தது.

12—2—56ல் கல்கியில் காணப்படும் மணிவாசகம் தம்பி.

சலிப்பு, வெறுப்பு, கசப்பு, — எல்லாம் ஓரோ வழி எழுகிறது— எனினும், ஆட்டிப்படைக்கும் அதிகாரம் டில்லியில் இருக்கிறதே என்பதை எண்ணும்போது, அச்சம் பிறக்கிறது, அதனுல் அடிபணிகிருர்கள்.

அவர்களுக்கு உள்ள அச்சத்தைப் போக்குவதும் நமது அருந்தொண்டிலொன்ருகத்தான் அமைய வேண்டும்.

டில்லியின் ஆதிக்கத்தை எதிர்த்து, நாம் நடாத்தும் அறிவுப் பிரசாரம், மக்களை மட்டுமல்ல, மருட்சியால் கட்டுண்டுகிடக்கும், இந்தத் தலைவர்களையும், அச்சத்தை விட்டொழிக்கச் செய்யும்.

ஏதுமிலாதார், இவர்கட்கே டில்லி ஆதிபத்தியத்தை எதிர்த்திடும் துணிவு பிறக்கிறதே, நாம் மட்டும், ஏன் கோழைகளாய், கோடிட்ட இடத்தில் கையொப்பமிட்டுக் குற்றேவல் புரிபவராய் இருந்திட வேண்டும் — கொற்றம் நடாத்த நம்மால் ஆகாதா, என்று அவர்கள் எண்ணிடும் நிலைமை பிறந்திடவேண்டும். அந்த நன்ஞளை எதிர்பார்த்தே, தம்பி, நீயும் நானும், நாளெல்லாம் உழைக்கிறேம். நமது உழைப்பு வீண் போகாது! நிச்சயமாக!!

அன்பன்,

அண்ணாதுரை

இலங்கையும் நாமும்

—

படு பிற்போக்கு, பாஸிஸ்ட் யு. என். பியை படுதோல்வியடையவைத்த சூராதி — சூரராக வீராதி — வீரராக இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா தம்பதிகள் சகிதம் லண்டன் போய்ச் சேர்ந்தார்.

மக்களின் ஆரவார மகிழ்ச்சி, லண்டனிலுள்ள இலங்கையர்களின் குதூகலம் அவரை வரவேற்றிருக்க வேண்டும். ஆனுல் நடந்ததென்ன? ''மலானின் மைத்துனரே திரும்பிப் போ, யூதாஸே-சிறுபான்மை இனத்தவர்களை கொலை செய்வதை நிறுத்து, தமிழ் மக்களின் உரிமைகளில் கைவையாதே'' இந்த கோஷங்களும், சுலோக அட்டைகளும், கறுப்புக் கொடிகளுமே அவரை வரவேற்றன.

இலங்கையில் தமிழ்ப் பேசும் இனத்தின் ஜீவாதாரமான உரிமைகளை படுபிற்போக்கான பாஸிஸ்ட் முறையில் குழி தோண்டிப் புதைத்துவிட்டு ஆசியாவின் புதிய ஜனநாயகம் என்றும் மக்களாட்சி என்றும் சொந்தத் தம்பட்டம் அடித்துக்கொண்டு போன பிரதமரை ''மலானின் மைத்துனரே இது தான் ஐயா உங்கள் ஜனநாயகத்தின மக்களாட்சியின் சுயரூபம்'' என்று 'வரவேற்று' இலங்கையில் தோன்றியுள்ள புதிய ஏகாதிபத்தியத்தை உலகுக்கு அம்பலப் படுத்தினுர்கள்.

பிரதமர் லண்டன் விமான நிலையத்திலிருந்து வெளியே வந்ததும் வெளியிலே லண்டனிலுள்ள தமிழ் மாணவர்கள் சிங்களம் மட்டும் சட்டத்தை ஆட்சேபித்து சத்தியாக்கிரகம் அனுஷ்டித்தார்கள். ஆனுல் பிரதமர் செய்தியைக் கேட்டதும் அவர்கள் இருந்த பக்கம் தலைகாட்டாது புழைக்கடை வாயிலாக கம்பி நீட்டினுர்.

தமிழ் மாணவர்களின் ஆர்ப்பாட்டம் பற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் தலைப்புகள் தீட்டி செய்திகளைப் பிரசுரித்தன. 'சமீபத்தில் ஒரு தெருவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்த இலங்கை மாணவர்களை வெள்ளையுடை ராஜ்ய தலைவர் பார்க்கவில்லை. வேறு மார்க்கமாக அவர் அழைத்துச் செல்லப்பட்டார்' என்று ''ஹெரால்ட்'' பத்திரிகை எழுதியது.

லண்டனிலுள்ள இலங்கை மாணவர்களின் இந்த ஆர்ப்பாட்டம் இலங்கையில் தமிழினத்திற்கு எதிராக நடந்து வரும் அநியாயத்தை உலக அளவில் அம்பலப்படுத்த உதவியிருக்கிற தென்றும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு அனுதாபமாக இது உலக அபிப்பிராயத்தை திரட்ட உதவியுளளதென்றும் கருதப்படுகிறது.

—"ஈழகேசரி"

*

தமிழ் இந்தியாவிலுள்ள தமிழர்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எல்லா வகையான ஆதரவுகளையும் தர முன்வரவேண்டும். அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் இலங்கை அரசாங்கத்தின் கொடுங்கோன்மையையும், கொள்ளைக்கும், கொலைக்கும் உடந்தையாக இருந்தவர்களையும் கண்டித்துக் கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தீர்மானங்கள் நிறைவேற்றி, இந்திய, இலங்கை அரசுகளுக்கு அனுப்பவேண்டும். இலங்கைத் தமிழரின் சமநீதிக்கொள்கைக்கு ஆதரவு தரும் முறையில் தமிழ்ப் பத்திரிகைகள் பிரசாரம் செய்யவேண்டும். சிறு வெளியீடுகள் பொதுக் கூட்டங்களின் மூலம் தமிழ் இலங்கையர்களின் கொள்கைகளைப் பரப்பவேண்டும். தமிழ் இலங்கைத் தலைவர்களை அழைத்து, பொதுக் கூட்டங்கள் நடத்துவதுடன், அவர்களது ஆலோசனையின் பேரில் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யத் திட்டமிடவேண்டும். இந்தியாவின் மற்றப் பகுதி மக்களுக்கும், தமிழ் இலங்கையரின் கோரிக்கைகளையும், அவற்றிலுள்ள நியாயத்தையும் எடுத்து விளக்கி, அவர்களது ஆதரவும் ஒத்துழைப்பும் பெற வழிவகைகள் காணவேண்டும்.

—"பிரசண்ட விகடன்"

★

காதலும் மதமும்

"ஈட்டிக் கண்களால், என் இதயத்தைத் துளைத்தாள். ஏங்கினேன் எத்தனையோ, நாள். என்ன சொல்வாளோ என்கிற அச்சத்துடன், அருகிற் சென்று, ஏந்திழையே என்றேன்..."

"ஏற்க மறுத்துவிட்டாளோ...?"

"இல்லை, பத்திரிகாசிரியரே! அந்த மனோரஞ்சிதம், என்னை மறுக்கவில்லை; மகிழ்ச்சியோடு மனமொப்பினாள்..."

"பிறகென்ன பிரச்னை? ஆனந்தத்தோடு திருமண விழாவை நடத்த வேண்டியதுதானே!"

"சுலபமாக சொல்லிவிட்டீர்கள். ஆனால், என் மனம் என்ன பாடு படுகிறது தெரியுமா?"

"வேறு சாதியோ!"

"இல்லை..."

"பெற்றோர் மறுக்கிறார்களோ?"

"அதெல்லாமில்லை. என் கொள்கைக்கு மாறாக நடப்பேன், என்கிறாள்"

*

கொள்கைக்கு மாறாக நடப்பேன் என்கிறாள்! —என்பதைக் கூறியபோது அந்த வாலிபனின் குரலிலே தொனித்த உறுதியையும், முகத்திலே மின்னிய சோகத்தையும் ஊன்றிக் கவனித்தார், ஆசிரியர்.

மதம், மக்களுக்கு அபின்-சூதர்கள் சுரண்டிக் கொழுக்கச் செய்த திட்டம், அதன் பெயர் சொல்லி நடக்கும் அநாகரீகங்கள் அநேகம்—என்றெல்லாம் மக்கள் மன்றத்தில் வாதாடுகிறவன் அவ் வாலிபன்.

அவளோ, இதற்கு நேர் எதிர் மாறு. மதச் சடங்குகள் யாவையும் கடைபிடிப்பேன், மகேசன் திருக் கோயில் செல்வேன், இதிலெல்லாம் என்னைத் தடுக்கக் கூடாது, அப்படியானால்தான் உன்னை மணப்பேன், என்கிறாள்!

கொள்கையோ, 'கூடாது, கூடாது! என்று சொல்லுகிறது.

காதலோ, "அவளின்றேல், நீ வாழ முடியாது", என்று கூறுகிறது.

இக்கட்டான நிலை, அவனுக்கு மட்டுமல்ல; அவளுக்குந்தான்.

காதலைத் தீய்க்கிறதே மதம்! — என்று கலங்கினான்.

அவரைக் கணவராகப் பெறத் தடை போடுகிறதே, இந்தச் சீர்திருத்தம்! — என்று ஏங்கினாள், பெண்.

என்ன செய்வது? மிகவும் சிக்கலான பிரச்னையாக இருக்கிறதே! என்று யோசித்தார், ஆசிரியர்.

பிரச்னையை வைத்து அழகான சிறுகதையைத் தீட்டி விடலாம்! இருவரையும் சாவுலகத்துக்கு அனுப்பி 'ஐயகோ...!' என்று முடித்து வாசகர்களின் கண்ணீலிருந்து நீரைக் கொட்டச்செய்யலாம்!

வாழ்க்கை யென்பது, சிறுகதை யல்லவே; தொடர் கதையாயிற்றே! இதனை, இப்படித்தானென்று தீட்டிடவோ, அல்லது இப்படிச் செய் யென்று திடீர் யோசனை கூறவோ இயலுமா? யோசித்தார், யோசித்தார் ஆசிரியர்!

*

வாலிபன் யார், எந்த ஊர், என்று கேட்கத் தோன்றும், தோழர்களுக்கு;

சிக்கலுக்கான வாலிபன், ஒரு முற்போக்குவாதி. நம்முடைய நாட்டிலல்ல, இந்நிகழ்ச்சி, அங்கேரியில்!

இதற்கென்ன பெரிய ஆலோசனை? நேரு முதல் பெரிய பெரிய உலகத் தலைவர்களெல்லாம் அனுதினமும் பேசி வருகிறார்களே, Co-existence ஒத்து வாழும் முறை. அதனை, நீ பொன்னே போல் போற்றும் ரஷ்யாவே, ஒத்துக் கொண்டிருக்கிறதே. இப்படி ஒவ்வொரு நாடுகளுமே, எத்தனைப் பிரச்னைகளிருந்தாலும் ஒத்து வாழலாம் என்று முன்னுக்கு வரும் பொழுது, ஒரு கணவனும் மனைவியுமா ஒத்து வாழ்ந்துவிட முடியாது?", என்று கூறினர், அவனுக்கு ஆலோசனை கூறவந்தவர்கள்.

"ஆடும் புலியும் ஒரே துறையில் நீர் அருந்தலாம்! அக்ரமக்காரனும் நல்லவனும் கூடிக் குலவிப் பேசலாம்! —அதெல்லாம் வெளியில் நடக்கக் கூடும். ஆனால், மனம் ஒன்றி வாழக் கூடிய கணவன் மனைவியிடையில் எப்படிச் சாத்யம்? அமெரிக்காவும், ரஷ்யாவும், ஒத்து வாழ்வதாக வெளியுலகுக்கு விளம்பரம் செய்யப்படலாம். அப்படி நடப்பதாக அவர்கள் திறமையாக நடிக்கவும்கூடும்! ஆனால், எப்போது. ஒருவரையொருவர் சாய்க்கலாம் என்கிற யோசனையும் கூடவேயிருந்துகொண்டுதானே இருக்கும். தப்பு எண்ணம், சதித்திட்டம், இவைகளோடு சமரச ஞானிகள்போல நடப்பது அரசியலில் எளிது! ஆனால், வாழ்க்கையில்......!"

யோசித்தான், வாலிபன். ஆசிரியரிடம் வந்தான்.

ஆசிரியருக்கும், பிரச்னை அவ்வளவு எளிதாக இல்லை. நீண்டயோசனைக்குப்பின், அவனிடம் சொன்னார் "வாலிப நண்பரே! உமது காதலைக் கருக்கிக் கொள்ளாதீர். அதனால், உமது கொள்கையையும் இழக்கவேண்டாம். இப்படிக் கூறுவதால் எப்போதுமே இரு துருவங்களாக நீங்கள் வாழ்ந்துவிடமுடியும் என்று நான் கருதவில்லை. திருமணம் ஆனதும், படிப்படியாக உமது கொள்கையின் பக்கம், மனைவியாரைத் திருத்த முயலும். அவருக்கே, தன்னுடைய காரியங்கள் தவறு என்று புரியும்படியாக நடந்துகொள்ளும். அடித்துப் பழுக்கவைப்பதைக் காட்டிலும், தானாகவே பழுப்பது நல்லதல்லவா?"

ஆசிரியரின் அறிவுரையை ஏற்றுச் 'சரி'யென்று சென்றிருக்கிறான் வாலிபன்.

சேதி, சென்றவாரம் ஏடுகளில் வந்திருக்கிறது.

காதலியை எப்படியும் தன் கொள்கைக்குத் திருப்பிடமுடியும் என்கிற நம்பிக்கை அவனுக்கிருக்கிறது. காரணம், கொள்கையிலுள்ள நீதியின் வலிவு அவனுக்குத் தெரிகிறது.

★

> உள்நாட்டில், துப்பாக்கிப் பிரயோகம் செய்து பலரைக் கொன்றவண்ணம், வெளிநாடுகளுக்குச் சென்று சமாதான உபதேசம் செய்வதற்குப் பெயர் பஞ்சசீலம் அல்ல.
>
> —என். பி. காரே.

அவன் ஒரு ஒட்டல்காரன்!

மழலை பேசும் குழவி, மான் விழி காட்டும் மங்கை நல்லாள், வாழ்க்கையின் அந்தி நேரத்தை வார்த்தைகளால் அல்ல நடையால் தெரிவித்திடும் பெற்றோர், ஆருயிர் நண்பர்கள், அழகான வீடு, இன்பமான வாழ்வு இவை அத்தனையையும் துறக்கும் துணிவு, இலட்சிய வீரர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறதல்லவா? அத் துணிவு, அவனுக்கும் உண்டாயிற்று, ஏனெனில் அவனும் ஒரு இலட்சியத்துக்காகவே எதிர்க்கக் கிளம்பினான் நெப்போலியனை!!

அழகு வழிந்தோடும் சுவிடசர்லாந்தின் ஓரத்தில், ஆஸ்திரியா நாட்டுக்குள் அடங்கியதாக டைரால் என்றோர் சிறு நகரம் இருந்தது. அதனை, தன் எடுபிடியாக இருந்த பவேரியா மன்னனுக்கு 'தானம' அளிக்கும்படி கட்டளை பிறப்பித்தான் நெப்போலியன்! அவனுடைய குரல் கேட்டாலே, குவலயம் எல்லாம் நடுங்கிக்கொண்டிருந்த நேரம். மன்னர்கள் எல்லாம் அவனது காலடியிலே, தத்தமது மணி முடிகளை வைத்து வணங்கிக் கிடந்த சமயம். அப்போது, இந்த ஒட்டல்காரன், எதிர்த்தான்! "இய்லாது, எமது டைராலைக் கொடுக்க", என்று கூவினான்!!

முடியுமா, உன்னால்! என்றனர், நெப்போலியன் முன் அணிவகுத்து நிற்கும் பிரம்மாண்டமான படையையும்,அவனது ஆற்றலையும் கண்டோர். ஏன் முடியாது?—என்று திருப்பிக் கேட்டான், இவன், தீரத்துடன்.

கண்ணில் கடைப் பார்வை காதலியர் காட்டி விட்டால் மண்ணில் குமரருக்கு, மாமலையும் ஓர் கடுகாம்!—என்றார், கவிஞர். அப்படிப்பட்ட, காதலியரையே இழந்திடுமளவுக்கு, இதயத்தில் கொண்ட இலட்சியம, உள்ள உறுதியை உண்டாக்கிடும் என்பதை அவனுடைய உற்றார் உறவினர் அறிந்தனரில்லை! ஆதலின், உன்னால் முடியுமோ, என்றனர்!!

ஏன் முடியாது? நான், போராடப்போவது, நீதிக்காக!—என்றான், அத்தீரன். படை பல மிருக்கலாம், பராக்குக்கூற பார் வேந்தர்களிருக்கலாம், பூமாரி பொழியலாம் பூமியிலுள்ள நாடுகள் அனைத்தும். அதனால் என்ன? என்னிடம் நீதியிருக்கிறது! அது உண்டோ அவனிடம்? என்னுடைய பிறப்பிடம் டைரால்! இதை எவனோ ஒருத்தனுக்கு எடுத்தளிக்க இவன் யார்? என்ன உரிமையிருக்கிறது, அவனுக்கு? உலகப் புகழ் பெற்றவன் எனில், இருக்கட்டும்! அதற்காக, அவனை நாமும் பாராட்டுவோம். ஆனால், அதைக் காட்டி நமது அழகு புரியாம் டைராலை பவேரிய மன்னனுக்கு அடிபணியும்படி உத்தரவிட இவன் யார்? — என்று கேட்டான்.

> மலைகள் மருளவும், அலைகள் அலறவும், மண்டிலமே கதிகலங்குமளவுக்குப் பேர் பெற்ற தீராதி தீரன் நெப்போலியன்! அவனை, எதிர்த்து நின்றான், ஒரு ஒட்டல்காரன்!!

பெரியவர்கள், அவன் பதிலுக்கு விளக்கமளிக்க மார்க்கமின்றி, அதே நேரத்தில் நெப்போலியனின் வீரத்தை மனத்தில் எண்ணிப் பெருமூச்சுவிட்டனர்.

வாலிபரோ, வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பினர்! எதுவரினும் சரி, அக்கிரமத்துக்குப் பதில் சொல்வோம், என்று புறப்பட்டனர்! நெப்போலியனிடமிருந்தளவுக்கு படைபலம் அற்றவர்கள், டைராலியர்கள். அவர்களையாளும் ஆஸ்திரிய மன்னனே, அஞ்சினான். ஏனெனில்; நெப்போலியன பக்கமிருந்த மன்னர்கள் பலர்! அவன் நினைத்தால், ஆஸ்திரியாவையே, கசக்கி ஊதிவிடமுடியும்! இந்நிலையில் சிற்றூர் டைரால், எந்த மூலை! எனினும், அந்த வீரன், தோள் தட்டி நின்றான் — கண்முன் தென்பட்ட பிரெஞ்சுக்காரர்களையெல்லாம், ஓடஓட விரட்டினான். "முன்பு, நீங்கள் ஒண்டி வாழ இடமளித்தோம் நாங்கள்! இப்போது அதற்கும் இனி அனுமதியில்லை. ஓடுங்கள்" என்று அடித்துத் துரத்தினான், தன்னுடைய நிலத்திலிருந்து.

நெப்போலியனுக்குச் செய்தி எட்டியதும், தனது பெரும்படைகளை ஏவிவிட்டான் ஆஸ்திரியாமீது! வெகு எளிதில், வெற்றிகொண்ட பிரெஞ்சுப் படைகள் டைரால்மீது பாய்ந்தன. தானும், குரல்கேட்டுச் சேர்ந்த வீரர்களுமாக ஆண்ட்ரீஸ்ஹோபர் எனும அம் மாவீரன் அவர்களை எதிர்த்தான். என்ன ஆகும் என்று சொல்லவும் வேண்டுமா? வெகு எளிதில், இவர்களை, நெப்போலியனின் படைகள் விரட்டியடித்தன. ஹோபர், அவர்கள் வசம் சிக்காமல், தப்பித்து குன்றுகளின் பக்கம் போய் ஒளிந்துகொண்டான்.

அழகுச் செடிகளுக்கு மத்தியிலே புல்லுருவிகள் இருப்பதுபோல, இலட்சிய வீரர்கள் வாழும் இடங்களிலும் 'விபீடணர்'கள் இருக்கிறார்களே — அப்படியொரு விபீடணன், வீரன் ஹோபர், ஒளிந்திருக்கும் இடத்தைப் பிரெஞ்சுக்காரர்களுக்குக் காட்டிக் கொடுக்க, அவனை அவர்கள் கைது செய்தார்கள்! கலகக்காரன் —கிளர்ச்சி செய்தவன் — ஆபத்து இவனைவிட்டு வைப்பது என்று குற்றங்கள் சாட்டப்பட்டு, அவனைச் சுட்டுக்கொன்றான், நெப்போலியன்.

இப்படியொரு ஒட்டல்காரன், தன்னுடைய ஊருக்காக எதிர்த்து நின்று போராடிய செய்தி ஐரோப்பா முழுதும் எட்ட; அதுதான் பிறகு நெப்போலியனை எதிர்க்கும் நெஞ்சுரத்தை அடிமைப்பட்டுக்கிடந்த நாடுகளுக்கெல்லாம் ஊட்டியதாக, சரிதாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

காற்றாடி இயந்திரங்கள்!

ரூ. 7 கோடிசெலவில் சுமார் 30000 காற்றாடி இயநதிரங்களை அமைத்து விவசாய அபிவிருத்தியையும் மின்சார உற்பத்தியையும்பெருக்க இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் சர்க்கார் ஏற்பாடு செய்கிறார்கள்.

தேசத்தில் காற்று அதிகமாக அடிக்கும் பிரதேசங்களில் இந்த யந்திரங்கள் அமைக்கப்படும். சிறு நிலப் பகுதிகள், தோட்டங்கள் இவற்றுக்குத் தண்ணீர் இறைக்கவும் விவசாயிகளின் சிறு விடுதிகளுக்கு மின்சாரசக்தி அளிக்கவும் இவை பயன்படும்.

கைத்தொழில் ஆராய்ச்சி இன்ஸ்டியூட்டின் காற்று சக்திஸப் கமிட்டி மூங்கிலையும் மரத் துண்டுகளையும் உபயோகப்படுத்தி ரூ. 800 லிருந்து ரூ. 1000க்குள் ஒரு காற்றாடி இயந்திரமியற்ற ஏற்பாடு செய்திருக்கிறது.

இதோ காமராஜர் தெரிவிக்கிருர், நம்மைக் காட்டி "இவர்களால்" என்ன ஆகுமென்று? அண்ட்ரீஸ் ஹோபர் போன்ற ஆயிரக்கணக்கானவர்களின் வீரக்காதைகளே அறியார் அவர்! அதனுல்தான் கூறுகிருர், நாடகமாடிகளேச் சேர்த்துவைத்துக்கொண்டிருக்கும் இவர்களால் என்ன இயலுமென்று.

தாயகம், அந்நியனிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது, அதனே விடுவிக்க வேண்டும் என்கிற உள்ள உறுதி ஏற்பட்டுவிடுமாயின்; அவர்கள் பிரபுக்களா, பணம் படைத்தவர்களா, மிட்டா, மிராசுகளா என்பதல்ல பிரச்னே! அவர்களும், கிளம்பிவிட்டார்கள் என்பதுதான்!

ஹோபர், நெப்போலியனே எதிர்க்கத் துணிந்தபோது அவன் பக்கம் நின்ருேர், ஏழடுக்கு மாளிகை எழுப்பியோரல்ல! சாதாரண விவசாயிகள்தான்! அவர்களேக் கொண்டுதான் அகில உலகமே கலங்கும் அவனே எதிர்த்தான். அதனுல், அவன் உயிர் போனது உண்மை. ஆனுல், அது உண்டாக்கிய உணர்ச்சிதான், ஐரோப்பிய நாடுகளேயும் கிளர்ந்தெழச் செய்து, அவ்வளவு பெரிய வீரனேயே அலேகடலுக்கு மத்தியில் தீவு ஒன்றில் போட்டு அடைத்தது! ஹோபர் ஏற்றிய சுதந்திர ஒளியால், நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பிறகு, டிரால் விடுதலேயும் அடைந்தது.

ஹோபர். பிரபுவல்ல; ஓட்டல்காரன்!

"இவர்களால் என்ன ஆகும்? ஏது பணவசதி! பத்திரிகைப் பீரங்கிகளேக் கொண்டு படையெடுத்துப் படுசூரணமாக்கிவிடுவோம்! நாடகக்காரர்களும், வாலிபர்களும் சேர்ந்து எந்தக் காரியத்தைச் சாதித்துவிட முடியும்?" என்று காமராஜரும் 'கனம்'களும் கேட்கிருர்கள்.

ஹோபர், வீரனல்ல, நெபோலியனுடன் ஒப்பிட்டால்! எனினும் அவன் படையில் சேர்ந்த விவசாயிகளின் ஏர் கலப்பைகளுக்குக்கூட துப்பாக்கிகளின் சக்தி ஏற்பட்டது. கோழையும் வீரனுஞன் சுதந்திர வேட்கையால்! இத்தனேக்கும் அவர்கள் மீட்கக் கிளம்பியது, ஒரு நாடுகூட இல்ல; சிற்றூர்.

இதோ, இங்குகூடக் காண்கிருேம். எவ்வளவு பெரிய தலேவர் நேரு! அவருடைய பெயரைச் சொன்னுல், காங்கிரஸ் தலேவர்களே கன்னத்தில் போட்டுக்கொள்வார்கள்! நெப்போலியனேப்போல அவர் அந்நியர்கூட அல்ல. நேற்றுவரை கூடிக் குலவி மகிழ்ந்தவர், குருளர் என்று கொண்டாடப்பட்டவர் —எனினும் எதிர்க்கிருர்கள் மராட்டியர்கள்! பம்பாய்ப் பட்டினத்துக்காக, மாபெரும் போராட்டம் நடத்துகிருர்கள்!

"இப்படி நீங்கள் செய்தால், என்ன செய்வேன் நான்? காங்கிரசுக்காரர்களாகிய நாமே, கிளர்ச்சி செய்வதா! மராட்டியம், வங்கம், பீகார், பஞ்சாப், தென்னுடு இப்படி எல்லோரும் கிளர்ச்சி செய்தால், என்னுவது காங்கிரசின் கதை"

நாம் கூடிக்குலவும் கட்சி, கொடி தூக்கிப் போராடிய கட்சி, அது அழியுமே!—என்று, சோகத்துடன் கேட்கிருர், காங்கிரசுத் தலேவர் தேபர்.

"கட்சி பெரிதா? நாடு பெரிதா? என்று பார்த்தால், நாட்டுக்காகக் கட்சியே ஒழிய, கட்சிக்காக நாடு அல்ல. காங்கிரசுக்காக, எமது மக்களுக்கு இழைக்கப்படும் அக்கிரமத்தை ஒருபோதும் சகிக்க முடியாது" என்கிருர்கள் மராட்டியர்கள். வார்த்தைகளால் அல்ல! நேரடி நடவடிக்கையின் மூலம்!

சிற்றூருக்காக, உலக மாவீரனேயே விவசாயிகளே மட்டும் வீரர்களாக வைத்துக்கொண்டு எதிர்த்தான், ஹோபர்.

பட்டினம் இன்னொருவர் வசம் அளிக்கப்படுகிறது! — என்பதற்காக, கட்சியைக்கூட உதறித்தள்ளுகிருேம் என்கின்றனர் மராட்டிய மக்கள்.

நாம், ஒரு நாட்டினேயே இழந்தவர்கள! அதனே மீட்டிட வேண்டுமென்கிற வேட்கை, நம்முடைய இதயத்திலே எவ்வளவு உள்ள உறுதியினேயும், நெஞ்சுரத்தையும் ஏற்படுத்தியிருக்க வேண்டும்? சுடலாம், அடிக்கக்கூடும், வீடுகள் மண்மேடுகளாக்கப்படக்கூடும், ஹோபரைக் காட்டிக் கொடுத்தவனேப்போல இங்கும், வீணர்கள் உருவாக்கப்படலாம், எனினும்...! என்றன்ருே, எண்ணற்ற வீரர்கள், அணிவகுத்து வருகிருர்கள் நமது முகாமில்.

அவர்கள் முன், நேருவின் புகழ் எம்மாத்திரம்? — அவருடைய அகில உலக அற்புத சாதனேகளேப்பற்றி எடுத்துக் கூறி என்ன பயன்!

மாவீரன்தான் நெப்பொலியன், அவனே எதிர்க்க ஓட்டல்காரனன்ருே உணர்ச்சிவேகம்கொண்டான்.

தேவிகுளம், பீர்மேடு — பறிக்கப்பட்டது நம்மிடமிருந்து. சென்னேயைத், தமிழ்நாடு, என்று மாற்றவும் மறுத்தது டில்லி.

> **அவர் பதில் சொல்கிருர்!**
>
> *ஆரியமாவது! திராவிடமாவது! — எனகிருர், ஆச்சாரியார்.*
>
> *இதெல்லாம், வெள்ளேக்கார ஆசிரியர்களின் போதனே! —எனவும் கூறுகிருர்.*
>
> *இதோ ஒருவர், ஆச்சாரியாருக்குப் பதிலளிக்கிருர்.*
>
> "தெற்கிலிருக்கும் நான்கு மொழிகளும், சமஸ்கிருதத்தோடு தொடர்பு இல்லாதவை அவைகள் தனித்தன்மை வாய்ந்த திராவிட மொழிகளாகும்.... சமஸ்கிருதம், இந்தோ ஆரிய மொழிகள் என்று கூறப்படுபவைகளின மூலமொழியாகும்."
>
> *இப்படிச் சொல்லுவது யார் தெரியுமா? வெள்ளேக்காரரல்ல! ஆச்சாரியரின நண்பர், ஜனதிபதி இராசேந்திர பிரசாத், ஐதராபாத்தில் ஜூலே 2-ந் தேதி இவ்விதம் பேசியுள்ளார்!*

இதனே, தாயக உணர்ச்சி கொண்டோர் எப்படிச் சகிக்க முடியும்? சிற்றூர், தம் வசமிருந்துபறிக்கப்படுகிறதென்றதும் ஹோபர் கிளம்பினுன், அவன் ஒரு ஓட்டல்காரன் தான், ஆயினும், அவன் ஏற்றிய உணர்ச்சியால், ஒரு மாவீரனே பிறகு சாயநேர்ந்தது.

ஆகவே, யார், ஈடுபடுவது, அவர்களுடைய அகலம்நீளம் என்ன, அந்தஸ்து ஆடம்பரம் எப்படி என்பதல்ல பிரச்னே; அவர்கள் ஈடுபடுகிற காரியம் எத்தகையது, நீதி நிரம்பியதா, நேர்மையுள்ளதா, என்றுதான் எண்ணிப்பார்த்திட வேண்டும்.

அதனே மறந்தான்நெப்போலியன்; அங்கே, சாய்ந்தான்.

தாயக உணர்ச்சியென்பது, சாதாரணமானதல்ல. புகையும் எரிமலே! அதனே, அடக்கிடவோ, ஆனேக் காட்டி மயக்கிடவோ, இயலாது, என்பதை உலக வரலாறுகள் எத்தனேயோ உணர்த்துகின்றன. அப்படிப்பட்ட உத்தமர்களில் ஒருவன்தான், ஒட்டல்காரனுன ஹோபர்.

★

“செந்தெரு” சம்பவம்!

‘‘கற்பழிக்கப்பட்டார்கள்!

கன்னியர் முதல் குடும்பப் பெண்கள் வரை, எவரையும் விடவில்லை!

ஓட ஓடப் பிடித்திழுத்து, நடுவீதியில் ஆடைகளை அகற்றி அக்கிரமம் செய்தார்கள், பாவிகள்!

‘ஐயோ!’ என்று அழுது புலம்பி அக்கம் பக்கத்து வீடுகளுக்குள் அடைக்கலம் புகுந்து தப்ப முயன்றால், அந்த வீடுகள் இடித்து நொறுக்கப்பட்டு, அவர்கள் வெளியில் இழுத்துவரப்பட்டனர்!

இதுபோல என்றும் நடந்ததில்லை! 1919ல் ஜாலியன் வாலாவில் படுகொலை நடந்ததே, அதையும் மிஞ்சிவிட்டது அட்டகாசம். 1947ல் வெள்ளையன் துப்பாக்கியும் பீரங்கியும் காட்டி நடத்தினானே ராஜதர்பார் — இருண்ட நாட்கள் என்று இன்றும் சொல்லிக் கண்டிக்கிறோமே — அதையெல்லாம் தோற்கடித்து விட்டது இந்தக் கொடுஞ் செயல்.

சொல்ல முடியவில்லை — நினைத்தாலும் நெஞ்சு பகீரென்கிறது— ஒரு பக்கம் ஆயுதந் தாங்கிய போலீஸ் படை, இன்னொரு பக்கம் ரௌடிகளும் கூலிகளும், இடையிலே மாட்டிக்கொண்டு சிறுரும் பெண்களும் மக்களும் அடைந்த அவதி சொல்லுந்தரமல்ல. ஐயகோ,” —என்று அலறுகிறார், நிருபர்.

“இந்து” ஏட்டுக்காகப் பிரத்தியேகச் செய்திகளை அனுப்ப அங்கே அமர்த்தப்பட்டிருக்கும் நிருபர், அறிவிக்கிறார் இவ்வண்ணம்.

பிரதாப்—வீர அர்ஜுன் — இந்துசமாசார்—என்று மூன்று ஏடுகள்! இவைகளில் கடைசி ஏட்டினை நடத்துபவரும் ஆசிரியரும் லாலா ஜெகத் நாராயண் எனும் காங்கிரஸ்காரர். சின்னாட்களுக்கு முன் வரையில், அமைச்சராக இருந்தவர். இப்போதுகூட, அந்த மாகாணத்தின் பிரபல காங்கிரஸ் வீரர்களின் தலைவராக விளங்குபவர்!

அவருடைய ஏடு உள்பட இந்த மூன்றுக்கும் “வாய்ப்பூட்டு” சட்டம் போடப்பட்டுவிட்டது. ஏனெனில், இந்த அட்டகாசங்களைப் பற்றி அவைகள் உலகுக்கு விபரம் தெரிவித்ததோடு, கண்டித்தும், எழுதினவாம்.

கடந்த ஜூன் 17-முதல், சம்பவம் நடந்த ஊரில் கடையடைப்பு நடைபெறுகிறதாம் — கண்டனத்தின் அறிகுறியாக.

காங்கிரஸ் தலைமைப் பீடம் இருவரை அனுப்பி, விபரம் கேட்டு வரச்சொல்லிற்று. குருமுகிசிங்கும், பீம்சேன சச்சாரும், அடியோடு மறுக்கவில்லை இந்த அக்கிரமங்களை. அடிதடி நடத்தப்பட்டது உண்மை — பெரிய கலவரம் நிகழ்ந்தது நிஜம்—பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லுகிறார்கள், ஆனால் அதற்குமட்டுமசாட்சிகள் கிடைக்கவில்லை எமக்கு, என்று அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

பஞ்சாபி மாகாணத்தைப் புனர் அமைப்பதைக் கண்டித்து, பஞ்சாபில் ஒரு பகுதியினர் கண்டன ஊர்வலம் நடத்த முயன்றனர், ஹோசியார்பூர் எனும் ஊரில்.

பஞ்சாபை ஆளும் சர்க்காருக்கு, இவர்களின் போக்குப் பிடிக்கவில்லை. எனவே, இப்படி அட்டகாசமும் அமளியும் நடத்தியிருக்கிறார்கள்.

பம்பாயைக் கண்டோம் முன்பு. இப்போது பஞ்சாபைப் பார்க்கிறோம்.

அமர்சிங் என்பவர், ஆளும் மந்திரிசபையில் ஒரு துணை அமைச்சராம். அவர்தான், இந்த அமளிகளுக்கெல்லாம் தளபதியாம். ‘இந்து’ நிருபர் அறிவிக்கிறார். அவருடைய தலைமையின் கீழ், இந்தக் கண்டன ஊர்வலத்தை நசுக்குவதற்காக வெளியூர்களிலிருந்து ஆட்கள் அழைத்து வரப்பட்டார்களாம்.

போலீஸ் படை மட்டுமே போதாது என்று கருதி, உடையில்லாத போலீஸ்காரர்களை ஒவ்வொரு இடத்திலும் நிறுத்தி வைத்தனராம்.

அதுவும் போதாது என்றெண்ணி அடியாட்களை வேறு தயாராக வைத்திருந்தனராம்.

மறந்துவிடவேண்டாம், பஞ்சாபை ஆள்வது, அண்ணல் காந்தியாரால் வளர்க்கப்பெற்று, உலகத் தலைவர் நேருவால் கொண்டாடப்பெறும் காங்கிரஸ் சர்க்கார்தான். சில திங்களுக்கு முன் இந்தச் சர்க்காரின் முயற்சியால்தான் அமிருதசரசில் காங்கிரஸ் மாநாடு கூடியது. அங்குதான் நேரு, இந்தியாவின் அகில உலகச் சிறப்பு பற்றியும், இத்தனை ஆண்டுகளில் காங்கிரஸ் என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறது என்பது குறித்தும், வானளாவப் புகழ்ந்து பேசி பூரிப்படைந்தார்.

அதே பஞ்சாபில், இதோ இந்த அக்கிரமம்! அடியாட்களும் ரௌடிகளும் தருவிக்கப்பட்டிருக்கிறார்கள, மக்களை அடக்க!

முன்னரே, செய்யப்பட்ட ஏற்பாட்டின்படி, கண்டன ஊர்வலம் நடத்துவோர் ஒரு முனைக்கு வந்ததும், போலீசார் நான்கு திருப்பங்களிலும் வேலி அமைத்து அவர்களைத் தேங்கச் செய்தனராம்.

அந்த வீதிக்குப் பெயர், செந்தெருவாம் (Red Street) திக்கு முக்காடி ஊர்வலத்தினர் திகைத்து நின்றபோது, போலீசார் ஒருபக்கம் பாய அடியாட்கள் இன்னொருபக்கம் பாய, பொறியில் அகப்பட்ட எலி போல், அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறார்கள், மக்கள்!

ஓட ஓட அடித்திருக்கிறார்கள்—ஆண் பெண் குழந்தை என்று பேதாபேதம் காட்டாது நொறுக்கித் தள்ளியிருக்கிறார்கள். உலகத்தில் கேள்விப்படாத 'கற்பழிக்கும்' கைங்கரியங்களையும் செய்திருக்கிறார்கள் காட்டுமிராண்டிகள். தடியடியினைப்பற்றி வர்ணிக்கும் ஏட்டாளர் Rained என்று எழுதுகிறார். மழைபெய்வதுபோல, சரசர வென்று பொழிந்து தள்ளினராம் அடிகளை. நினைக்கவே நெருப்பாகிறது, உள்ளம்.

ஜாலியன்வாலாபாக்கில் இப்படித்தான் எல்லாப்பக்கத்திலும 'வேலி' அமைத்துக்கொண்டு சுட்டுத் தள்ளினான் டயர், அதேபோல 'சக்ர வியூகம்' அமைத்துக்கொண்டு அடித்து நொறுக்கியிருக்கிறார்கள் அகிம்சா மூர்த்திகள் — என்கிறார், காங்கிரஸ் தலைவரான ஜகத் நாராயணன.

இந்தச் செய்திகளை வெளியிடக்கூடாதெனப் பத்திரிகைகளுக்கு 'வாய்ப்பூட்டு' போடப்பட்டுளளது. எனின, சம்பவத்தின் கோரத்தைக் கூறவும் இயலுமோ.

அடிமை உனக்குச் சுதந்திரமோ, அடா பயலே,—எனச் சொல்லி, முன்பு அடித்துத் துவைத்தான், வெள்ளையன்.

எமது தீர்ப்புக்கும் கண்டனமோ; —என்று, சித்திரவதை செய்துள்ளது, காங்கிரஸ்.

முன்பு, மராட்டியம்.

இப்போது, பஞ்சாப்.

Unmentionable out rages against women of all ages— என்கிறார் செய்தியாளர். இன்ன வயதுளளவர்கள் என்றுகூட இலட்சியம் செய்யாமல் எல்லா வயதினரையும் மானபங்கப் படுத்தினராம். அதன் அளவை எடுத்துக் கூறவும் இயலாதாம்.

இந்தக் கொடுமையைக் கண்டித்து அன்று மூடப்பட்ட கடைகள் பதினைந்து தினங்களாக ஹோசியார்பூரில் இன்னும் திறக்கப்படவில்லையாம்.

இந்த அக்கிரமத்தைக் கண்டித்து ஜூன் 27ந் தேதி நாடு முழுமையும கண்டனமும் கடையடைப்பும் நடைபெற்றதாம்.

அதனால்தான் காங்கிரஸ் தலைமை, பஞ்சாப் காங்கிரஸ் தலைவர் குருமுக் சிங்கையும், பஞ்சாப் முன்னாள் காங்கிரஸ் முதலமைச்சர் பீமசேனசச்சாரையும், அனுப்பி வைத்தது—நிலைமைகளைக் கண்டு வர.

அவர்களும், நிகழ்ச்சிகளை அடியோடு மறுக்கவில்லை. கற்பழித்த காரியத்தைக் கண்கூடாகப்பார்த்த சாட்சிகளை மட்டும் காண இயலவில்லை என்கின்றனர்.

ஜாலியன் வாலாவும், 1947ம் நடத்திய வெள்ளையனுடன் விருந்து அருந்தி இலண்டனில் குலவிக்கொண்டிருக்கிறார் நேரு பண்டிதர். அவருக்கு இந்த வாய்ப்பையும், அரசாளும் உரிமையையும் பெற்றுத் தந்த மக்கள், செந்தெருவில் மானமிழந்தவராய், செங்குருதி சிந்தியோராய் புலம்பித் தவிக்கின்றனர்.

இத்தனைக்கும் அவர்கள் நேருவின் ஆட்சியை ஒழிக்கக் கிளம்பவில்லை—காங்கிரசை அழிக்கக் கச்சை கட்டிக்கொண்டு புறப்படவில்லை—டில்லியின் தீர்ப்பு அநீதி நிரம்பியது, என்றார்கள். அதனைத் தெரிவிக்க ஊர்வலம் நடத்தினார்கள்!

அதற்கு, இவ்வளவு அலங்கோலமும அட்டகாசமும் நடத்தப்பட்டிருக்கிறது—போலீஸ் படை போதாதென்று காலிகளையும் ரௌடிகளையும்கூட நாடியிருக்கிறது அரசாங்கம்; காங்கிரஸ் அரசாங்கம!

இந்த அக்கிரமத்தைக் காண—நிகழ்ந்தது வடக்கில் எனினும்—நெஞ்சு கொதிக்கிறோம் நாம். டில்லிககு இவவளவு திமிரும், அதற்கு ஒத்தூத மாகாண அரசுகளுக்கு இவ்வளவு தைரியமும் ஏற்பட்டது உண்மையில் வெட்கப்பட வேண்டியதாகும்.

முனபு மராட்டியம்,
இப்போது பஞ்சாப்,
நாளை ...?

அச்சமும், வேதனையுமே காங்கிரஸ் அரசின் போக்காகிவிட்டது. இந்த அழகில் இங்குள்ள காமராஜ நம்மை ரௌடிகள், காலிகள் என்கிறார்—எவனோ, சீரங்கம் கோயிலுக்குள் செருப்புப் போட்டுக் கொண்டு போனதாகக் கற்பித்துக் கொண்டு!

ரௌடிகள், காலிகள்—அதோ, ஆளும் கட்சியால் ஏவிவிடப்படுகிறார்கள்.

மக்கள் மீது ஏவிவிடப்படுகிறார்கள்.

அடித்து நொறுக்கியது மட்டுமல்ல கன்னியரின் கற்பும் பறிபோயிருக்கிறது. இந்தக் கோரம், பாகிஸ்தான் பிரிவினைக்குமுன் ஏற்பட்ட கலவரங்களில்தான் நிகழ்ந்ததாகச் சொனனார்கள். முஸ்லீமகளின மீது குற்றஞ்சாட்ட, இந்தக் கொடுமைகளை எடுத்துச் சொன்னார்கள் காங்கிரஸ்காரர்கள். இன்று, கல்யாண மாகாத பெண், கணவனோடு வாழ்கிறவள், வயதேறியமாது, குடும்பத் தலைவிகள—அனைவருடைய மானமும் பறிக்கப்பட்டிருககிறது, அசோக சக்கர தாரிகளின ஆட்சியில்.

அக்கிரமத்துக்குப் பலியான பெண்களில் எததனைபேர், ஆற்றையும் குளத்தையும் நாடினரோ அறியோம — ஐயோ, என் பருவ வாழ்வு துண்டிக்கப்பட்டுவிட்டதே, இனி எவன் என்னைத் திருமணம் செய்துகொள்வான்? — என்று ஏங்கி விம்மிய இளம் பெண்கள எத்தனைபேரோ, கற்பு பறிக்கப் பட்டுவிட்டதே, கணவன் எப்படி இனி நம்மை ஏற்றுக்கொள்வான்? நம கதி என்ன—எனறு கண்ணீரும் கம்பலையுமாய் எத்தனை குலக்கொடிகள் எங்கெங்கு அலைகின்றனரோ.

இதைத்தானா, இவர்களது ஆட்சியில் எதிர்பார்த்தனர், மக்கள். இவர்களது தீர்ப்பினை ஏற்றுக கொள்ளாததற்கு இவ்வளவுபெரிய தண்டனையா மக்களுக்கு.

மராட்டியத்தில், குண்டு மாரி நடந்தது — நூற்றுக்குமேல் பிணமாயினர்.

பஞ்சாபில், அதைவிட ஒருபடி மேலே போயிருக்கிறது காங்கிரஸ் தர்பார். எது இந்தியப் பெண் மணிக்கு ஜீவாதாரம் என்று கருதப்படுகிறதோ அந்தக் கற்பு பறிக கப்பட்டிருக்கிறது பாதகர்களால்.

✶

சூடான்

எகிப்துக்கு அருகிலுள்ள சூடானில் நான்கு மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட கூட்டு மந்திரி சபை கவிழ்ந்து விட்டது. பிரதமர் இஸ்மாயில்—அல்–அஜாரி தோற்கடிக்கப்பட்டார். அஜாரியால் தான் சூடானுக்குச் சுதந்திரம் மலர்ந்ததென்றும், அப்பேற்கொத்த தியாக புருடரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரக் கூடாதென்றும், அவருடைய கட்சியினரான தேசீயக் கட்சியினர் பேசினர். ஆனுல், அவரைத் தோற்கடித்த உம்மா கட்சியினர், "அதெல்லாம் சரி ஐயா, அந்தப் பெருமையைச் சொல்லிய வண்ணம், தன்னுடைய கட்சிக்கும், கட்சிக்காரர்களுக்கும் சலுகைகளைத் தேடிக் கொள்வது நியாயமா? இதை எப்படிச் சகிக்க முடியும்?", என்று கேட்டு தோற்கடித்தனர். சூடானிலிருந்து வெள்ளையர் வெளியேறக் காரணமாயிருந்தவர் அஜாரிதான். 90 லட்சம் மக்கள் கொண்ட சூடான், தமது தேசத் தியாகியைப் பதவியினின்றும் விரட்டியிருக்கிறது. காரணம் அவர், வரம்பை மீறிச் சென்றதுதான்.

இந்தோனேஷியா

"பார்மோசாவை, செஞ்சீனுவுடன் சேராமல் தனியாக வைத்திருக்கிருரல்லவா, சியாங்கேஷேக். அதைப்போல, இந்தோனேஷியாவுடன் சேர வேண்டிய ஒரு தீவு, இன்னும் டச்சுக்காரர்கள் வசமே உள்ளது. அத்தீவின் பெயர் டச்சு, நியுகினி. இதனை மேற்கு கிரியான் என்றும் அழைப்பர். இதனை டச்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்து மீட்க, தனது சர்க்கார் எல்லாவித முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள இருப்பதாக இந்தோனேஷியாவின் தகவல் அமைச்சர் சுதீப்ஜோ, தெரிவித்துள்ளார்.

போலந்து

இரஷ்யாவின் வசமிருக்கும் போலந்திலுள்ள போஜினன் எனுமிடத்தில் பெரிய அகில உலகக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது சர்க்காரின் மீது தங்களுக்குள்ள திருப்தியைத் தெரிவிக்க முனைந்தனர், எதிர்க் கட்சியினர். அதன் விளைவாக பெரிய கலவரம் ஏற்பட்டு, பலர் சாக நேர்ந்தது. கலகத்தை அடக்க கவச மோட்டார்களும், டாங்கிப் படைகளும்கூடத் தருவிக்கப்பட்டனவாம். இந்தக் கலவரத்துக்கு அமெரிக்காவின் தூண்டுதலே காரணமென்கிறது, ரஷ்யா. அமெரிக்காவோ, "இல்லை இல்லை. அங்குள்ள கம்யூனிஸ்டு அரசாங்கம், தொழிலாளர்களுக்கான ரொட்டி முதலியவைகளைச் சரிவர விநியோகிக்க வில்லை. அதனுல்தான் கலவரம்" என்கிறது. உண்மைக் காரணம் எதுவானுலும், இப்படியொரு கலவரம் ஏற்பட்டதும், அதை அடக்கும் நிர்ப்பந்தம் உண்டானதும், சிந்திக்க வேண்டிய விஷயமேயாகும்.

ரஷ்யா

ஸ்டாலினைப்பற்றி ரஷ்யா கையாண்டு வரும் தற்காலப் போக்கினை இத்தாலி, பிரான்சு முதலிய நாடுகளிலிருக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் "விமர்சித்து", கண்டனக் குரல் காட்டினவல்லவா? அதற்குப் பதில் கூற முன்வந்த சோவியத் "பிராவ்டா" வெளி நாட்டிலுள்ள நண்பர்கள் ஏன், அப்போதே ஸ்டாலினை பதவியை விட்டு நீக்கியிருக்கக் கூடாது என்று கேட்கின்றனை. அப்படிச் செய்யும் சூழ்நிலையே அப்போது இல்லை. போர்க் காலத்தில், ஸ்டாலினுக்குப் பலருடைய தயவு தேவைப்பட்டதால்எல்லோருடைய ஆலோசனைகளையும் கேட்டு நடக்க வேண்டியவரானுர். போர் முடிந்ததும், புகழ் முழுவதும் ஸ்டாலினுக்குப் போயிறறு. அதனுல், மாபெரும் சக்தி பெற்று, யாருமே எதிர்க்க முடியாத செல்வாக்கைப் பெற்ருர். அப்போது எப்படி இயலும் எங்களால்?", என்று கேட்டிருக்கிறது.

சைப்ரஸ்

நாடு கடத்தப்பட்ட மதகுரு மகாரியாசை விடுவிக்க வேண்டும் என்கிற இயக்கம் சைப்ரசில், வலிவு பெற்று வருகிறதாம், இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கிலாந்தில் காமன் வெல்த் நாடுகளும் கூடிப்பேசுவதால், சைப்ரசுக்கு விடுதலை அளிப்பது சம்பந்தமாக ஏதாவது ஒரு முடிவுக்கு இங்கிலாந்து வரும் என்று கருதப்பட்டது. அந்நம்பிக்கைக்கு வழியில்லை என்பது போல இப்போது செய்தி வருகிறது. சைப்ரசை கிரேக்கத்துடன் இணைப்பதை இஸ்லாமிய நாடான துருக்கி விரும்பவில்லை நாம். கிரேக்கருக்கு அதிகச் செல்வாக்கு வந்துவிடுமோ என்கிற அச்சத்தில், அது தன் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளதாம். நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கல்லவா? துருக்கியின் ஆட்சேபத்தைக் காட்டி இங்கிலாந்து கேட்கிறது, "துருக்கி, எமது நேசநாடு அதன் கருத்தை நாங்கள் அலட்சியம் செய்ய முடியாது. ஆகவே, கொஞ்சம் யோசித்தே எந்த முடிவும் செய்ய வேண்டும்" என்பதாக.

★

படிக்கும் ஆர்வம் மட்டும் ஒருவருக்கு உண்டாகிவிட்டால், அத்தாகத்தை தணிக்க யாராலும் இயலாது! ஏழை, இல்லாதவன், வசதியற்றவன், வாழவே போராடுகிறவன் என்றாலும் எப்படியாவது படிக்க வேண்டுமென்றே முயற்சிப்பான். அப்படி முயற்சித்து வெற்றிபெற்ற அறிஞர்கள் பலருண்டு உலகில். கல்விக் கூடங்களுக்குச் செல்லாமலே, கண்டதைதையும் படித்து பண்டிதரானோரும் உண்டு. அப்படிப் பட்டவர்களிலே ஒருவன் தான், படத்திலிருக்கும் **டாக்டர் காட்கன்.**



பதினொரு வயதிருக்கும், நிலக்கரிச் சுரங்கத்திலே உழைத்து, தன்னுடைய தம்பிகளையும் தங்கைகளையும் காப்பாற்ற வேண்டியபெரும் பொறுப்பு இவனுக்கு இருந்தது. அதனால் சுரங்கத்தில் தினசரி எட்டு மணி நேரம் வேலைசெய்வான். அப்படி வேலைசெய்யும்போது எப்படியாவது கொஞ்ச நேரம் ஓய்வு கிடைக்குமல்லவா? அந்த நேரத்தில் ஏதாவது ஒரு புத்தகத்]தை வைத்துக்கொண்டு படிப்பானாம். இப்படி பத்து ஆண்டுகள்கற்ற பிறகு, இவன், ஒருபத்திரிகையை ஆரம்பித்தானாம். அனுபவ முத்திரைகளை ஏந்தி வெளிவந்த இந்த இதழ், அமெரிக்காவில், ஏராளமாக விற்கத் துவங்கியதாம். அதில், இவனுடைய எழுத்துக்களை விரும்பி, எல்லோரும் படித்ததால் தினசரி காலையில் 1500 வார்த்தைகள் கொண்ட கட்டுரையை எழுதி முடிப்பானாம்.

இங்கிலாந்தில் பிரதமராக யிருந்த கிளாஸ்டன், தன்னுடைய அலுவலகத்தில் நான்கு மேஜைகளை வைத்திருந்தார். இலக்கிய சம்பந்தமாகக் கவனிக்க ஒன்று, கடிதம் எழுத இன்னொன்று, அரசியல் பிரச்னைகளை ஆராய மூனறுவது, சொந்த விஷயங்களைப் பற்றிக் கவனிக்க நான்காவது, என்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மேஜை. அந்தந்த வேலையைக் கவனிக்கும்போது அந்தந்த மேஜையில் போய் உட்கார்ந்து கொள்ளுவாராம். அவர் இதே முறையைத்தான் டாக்டர் காட்மனும் பின்பற்றினர். "நூல்கள் படித்தாலும் சரி, வேலைகள் செய்தாலும் சரி, செக்கு மாடுகளைப் போல ஒரே விஷயத்தைத் தொடர்ந்து செய்யக் கூடாது. மனிதனுக்கு, மாற்றங்கள் வேண்டும். இனிப்பையே தின்று கொண்டிருந்தால், போதாது, காரமும் இருக்க வேண்டும். அப்போது தான்மனிதனுக்கு உற்சாகம் ஏற்படும் என்பது இவர் கொள்கை. அதனால் ஒரே வேலையைத் தொடர்ந்து செய்யமாட்டார்! மனதுக்கு உணர்ச்சியும் உற்சாகமும் ஊட்டிக்கொள்ள, அவரது தினசரி வாழ்க்கையில் பல மாற்றங்கள் இருக்குமாம்.

அவருடைய சிறுவயதில், அவருடைய துடுக்குத்தனங்களைக் கண்டோர், நிச்சயம் இவன் ஒரு திருடனுவான் எனறே கூறினராம். அந்தத் துடுக்கை அடக்கி, இவரை ஒரு அறிவாளியாக ஆக்கியது, இவர் கற்ற நூல்களே ஆகும். ஆகவே, ஒவ்வொரு மனிதனும், தினசரி சில மணி நேரங்களாவது படிப்பதற்காகச் செலவிட வேண்டும். "சுகவாசிகளுக்கு நிறைய ஓய்வுகிடைக்கிறது. எங்களுக்கேது?'' என்று கூறுமல் தொழிலாளர்களும் விவசாயிகளும் பல விஷயங்களைப் படித்து அறிய வேண்டும்.

படிக்கத்தெரிந்தாலன்றோ நாங்கள் படிக்க?—என்று விசாரத்துடன் கேட்கும் பலர் தெரிகின்றனர் நாட்டில். அவர்களுக்கு இந்த ஆர்வத்தை எழுப்ப படித்தவர்கள் தினசரி சில நிமிடங்களாவது உலக அறிவையும் நூல்களின் அறிவையும் ஊட்ட வேண்டும். அறிவு பரவிவிட்டால், அந்தச் சமூகத்தை அழிக்க யாராலும் இயலாது. அம்முயற்சியிலீடுபட வேண்டுமென திராவிடத் தோழர்களை, 15-ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இச்சமயத்தில் கோருகிறோம். படித்துக் காட்டுங்கள் அறிவேடுகளை. நீங்களும் படியுங்கள் இயக்க ஏடுகளை. நேரமில்லையே, என்று ஏங்காதீர்கள். நேரத்தை உண்டாக்கிக் கொள்ளுங்கள் — ஓய்வும் உற்சாகத்தோடு கழியும்: அறிவும் பெருகும்.